பக்கங்கள்: 18

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 23 ஞாயிற்றுக்கிழமை 08.09.2019 கதிர் 307

### இனி இது ரகசியம் அல்ல!

இது கடந்த ஞாயிற்றுக்கிழமை – சரியாக ஒரு வாரத்துக்கு முன்னர் – நடந்த சம்பவம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பு உத்தியோக பூர்வ இல்லம். அவரைச் சந்திப்பதற்கு மேல் மாகாண ஆளுநரான முன்னாள்

பக்கம் 02

யாழ். மாநகர சபைக் கட்டடத்துக்கு மட்டுமல்ல

# அரசியல் தீர்வுக்கும் அத்திபாரம் போட சுமந்திரன் வலியுறுத்தல்!

## பிரதமர் ரணிலுக்கு முன்னால் நேற்று பகிரங்கக் கோரிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்08

தமிழ் மக்களின் சொத்துக்களை அழித்த ஐக்கிய தேசியக் கட்சியினரே இன்றைக்கு அதனை மீளமைத்துத் தருகின்றனர் என்பதை யாழ். மாநகர சபைக் கட்டடத்துக்குப் பிரதமரே நேரில் வந்து அடிக்கல் நாட்டி, நிதி ஒடுக்கீடு செய்துள்ளமை காட்டுகின்றது எனக் குறிப்பிட்டு அதனைச் சிலாகித்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அதேபோன்று அரசியல் தீர்வுக்கும் அத்திபாரம் போடப்பட வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் வைத்துக் கொண்டு வலியுறுத்தினார்.

பக்கம் 03

## வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்

யாழ்ப்பாணத்தில் கூறினார் சம்பிக்க



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 08

இலங்கையில் வடக்கில் மட்டும் மக்கள் படுகொலை செய்யப்படவில்லை. தெற்கிலும் ஏராளமான இளைஞர், யுவதிகள் படு

பக்கம் 11

## ஒருமித்த தீர்வைக் காண ஒன்றித்து முயல்வோம்!

'என்டபிரைஸ் ஸ்ரீலங்கா' நிகழ்வில் ரணில் அழைப்பு

- எஸ்.நிதர்ஷன் -

அரசியல் தீர்வு வேண்டும் என்பதற்காக நாங்கள் முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகளுக்கு கூடுதலானவர்களின் பங்களிப்பு நாடாளுமன்றத்திலே தேவையாக இருக்கின்றது. ஆகவே முரண்பாடுகளில்லாமல் அனைவரும்

பக்கம் 02

## தேர்தல் காலத்திலாவது யாழ்ப்பாணம் மீது அக்கறை கொள்வது சந்தோசம் தருகின்றது

ரணில் முன்பாகக் கூறினார் வடக்கு ஆளுநர்



யாழ்ப்பாணம், செப். 08

தேர்தல் காலத்திலாவது யாழ்ப்பாணம் மீது கரிசனை காட்டுவதையிட்டுச் சந்தோசம் அடைகின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரம

பக்கம் 03

## டிப்பர் சில்லில் சிக்கி குடும்பஸ்தர் மரணம்

கிளிநொச்சி, செப். 08

கிளிநொச்சி, முரசுமோட்டைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

பக்கம் 03

## யாழ்.மாநகர மண்டபத்துக்கு அடிக்கல்லை நட்டார் ரணில்

235 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும்



யாழ்ப்பாணம், செப். 08

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான மாநகர மண்டபத்தை அமைப்பதற்கான அடிக்கல்லைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நட்டு வைத்தார்.

யாழ்ப்பாணம் மாநகர முன்னாள் மண்டபம்

பக்கம் 11

## நல்லூர்க் கோவில் போல அழகுடன் கம்பீரமாக யாழ் மாநரசபையின் கட்டடமும் எழுந்து நிற்கும்!

அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் ரணில் உறுதி


- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம்,செப்.08

இங்குள்ளநல்லூர்க்கோவில் எந்தளவிற்கு அழகிய கட்டடமாக எழுந்து நிற்கிறதோ அதே போல இந்த நகரக் கட்டடத்தையும் அழகான, எளிமையான கட்டடமாக,

பக்கம் 03

## சஜித்துக்கு ஆதரவாகக் கூட்டம்



கொழும்பு, செப். 08

அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்குமாறு அழுத்தம்

பக்கம் 03

## சிங்கள, தமிழ் அரசியல் தலைவர்களுக்கு 'எழுக தமிழ்' ஊடாகத் தெளிவான செய்தி!

கூறுகின்றார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

வவுனியா, செப். 08

ஜனாதிபதி வேட்பாளர்கள் உட்பட சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு 'எழுக தமிழ்' பேரணி மூலம் தெளிவானசெய்திவழங்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி

பக்கம் 11

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை புரிந்தவர்கள் ரணிலும் மங்களவும்!

'என்டபிரைஸ் ஸ்ரீலங்கா' நிகழ்வில் சுமந்திரன் புகழாரம்



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம்,செப்.08

யுத்தத்திற்குப் பிறகு நாங்கள் இந்த நாட்டிலே தலைநிமிர்ந்து சக பிரஜைகளாக – சம உரித்துடைய பிரஜைகளாக – எங்களுக்குரிய

பக்கம் 11

## 'என்ரர்பிரைஸ் ஸ்ரீலங்கா' கண்காட்சியை நேற்றுத் திறந்து வைத்தார் பிரதமர் ரணில்



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், செப். 08

யாழ்ப்பாணத்தில் என்டர்பிரைஸ்ஸ்ரீலங்காதேசிய கண்காட்சி ஆரம்ப நிகழ்வு நேற்று

பக்கம் 11

## அல்லைப்பிட்டி விபத்தில் வயோதிபப் பெண் சாவு!

யாழ்ப்பாணம், செப். 08

சாரதி நித்திரை தூங்கியதால் கப் ரக வாகனம் வீதியை

பக்கம் 02

# எங்கள் மாவீரர்களையும் தீரமிகு போராட்டத்தையும் நாங்கள் அனைவரும் அடியோடு மறந்து போனோமா?

## நேற்று வரணி நிகழ்வில் விசனத்துடன் சிறிதரன் எம்.பி. கேள்வி






இப்போது தென்னிலங்கையிலே யார் வேட்பாளர்கள் என்ற பிரச்சினைக்கு அப்பால் அவர்கள் தமிழர்களின் நாடி பிடிக்கிறார்கள். கோட்டாபய கேட்கிறாரா, அல்லது சஜித் கோட்கிறாரா, இன்று காலையில் இருந்து ரணில் விக்கிரமசிங்க கேட்கிறாரா, ஜே.வி.பியின் அனுரகுமார திஸநாயக்க கேட் கிறார் என்பதல்ல அவர்களின் பிரச்சினை. தமிழர்கள் யாருக்கு வாக்களிக்கிறார்கள் என்பதைத்தான் அவர்கள் பார்க்கிறார்கள்.

–வரணி இடைக்குறிச்சி மேற்கு நவா சனசமூக நிலையத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவஞானம் சிறிதரன் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கருத்துத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு: –

அபிவிருத்தி சம்பந்தமான விடயங்களைத்தான் நாங்கள் எல்லோரும் இப்போது கதைக்கிறோம். ஆனால் எங்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு இருக்கிறதா? சுதந்திரமான வாழ்க்கை வாழ்கிறோமா? நாங்கள் எல்லாரும் நிம்மதியாக இருக்கிறோமா? எம்மைச் சுற்றி யார் இருக்கிறார்கள்? ஏனையவர்கள் என்ன கதைக்கிறார்கள்? இதைப் பற்றி யாரும் இப்போது சிந்திப்பது இல்லை.

பக்கம் 08

### ஒருமித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து ஒரு தீர்விற்கு ஒருமித்து வரவேண்டும். அவ்வாறானதொரு தீர்வை ஏற்படுத்தி அனைவரும் இணைந்து செல்கின்ற பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அதனூடாகவே சக்தி மிக்க வளமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென்று நம்புகின்றோம்.

– மேற்கண்டவாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் 'என்டர்பிரைஸ் சிறிலங்கா' தேசியக் கண்காட்சியை நேற்று மாலை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது தெரிவித்தார். அந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

எங்கள் நாட்டில் சுதந்திரம் கிடைத்திருக்கிறது. யாருக்கும் எந்தப் பயமும் இல்லை. எந்தச் சந்தேகமும் இல்லை. நாங்கள் சமனானவர்களாக வாழக்கூடிய நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நல்லிணக்கத்தை உருவாக்கிக்கொள்வதற்குமொழி, மதம் என்ற விடயங்களை நாம் மதித்துச் செயற்பட்டு வருகின்றோம். குறிப்பாக சிங்களம், தமிழ், முஸ்லீம் என எங்கள் கலாசார பெருமையோடு நாங்கள் இலங்கையர்களாக நல்லிணக்கம் மிளிர வேண்டும்.

ஆகவே, மீண்டும் ஒருதடவை யுத்தம் ஏற்படாத அளவிற்கு எங்களுடைய செயற்பாடுகள் அமைய வேண்டும். எங்களுடைய நாட்டிலே யுத்தம் கடந்த காலங்களில் ஏற்பட்டதன் காரணமாக கஷ்டமும் துன்பமும் ஏற்பட்டிருக்கின்றன. அபிவிருத்தி தடைப்பட்டிருக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக பல உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, மீண்டும் யுத்தம் இல்லாத ஒரு நாடாக, நல்லிணக்க நாடாக இந்த தேசம் திகழ வேண்டுமென்பதே எங்கள் எண்ணமாக இருக்கிறது.

அதே போன்று பயங்கரவாதம், தீவிரவாதம் இல்லாத நாடாக இருக்க வேண்டும். கடந்த 2015 ஆம் ஆண்டு எமது அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சில படிமுறைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். ஆனாலும் சிலவற்றைச் செயற் படுத்த முடியாமல் இருக்கின்றது. நாடாளுமன்றத்திலே அரசமைப்பு உள்ளிட்ட விடயங்களிலே கூடுதலானவர்களின் பங்களிப்புத் தேவையாக இருக்கின்றது.

எங்கள் நாட்டின் அதிகார பரவலாக்கத்தில் மாகாண சபைக்குரிய அதிகாரங்களை பரவலாக்கிக்கூடுதலாக வழங்கி, அவற்றை நிர்வகிக்க வேண்டும். அதிகாரப் பரவலாக்கம் என்பது முக்கியமான அம்சமாகக் காணப்படுகின்றது. இதற்காக குழுக்களை அமைத்து அவர்களை அழைத்து அதற்குரிய கலந்துரையாடல்களையும் நடத்தி இருக்கின்றோம்.

அதற்காக எதிர்க்கட்சியுடன் ஒரு தீர்மானத்தை நாங்கள் எடுத்திருக்கிறோம். விசேடமாக எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பலராலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இதில் எந்தவித முரண்பாடுகளும் இல்லாமல் ஒரு தீர்விற்கு நாங்கள் வர வேண்டுமென்பதே முக்கிய அம்சமாகும்.

இதற்கான எங்களுடைய நடவடிக்கைகளை இனிவரும் காலங்களிலே முன்னெடுப்பதற்காக இதற்காக நாடாளுமன்றத்தில் ஒரு வரம் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றோம். அதே போன்று, அரசியற் தீர்வைப் பெற்றுக் கொண்டு நாங்கள் அனைவரும் இணைந்து செயற்படுகின்ற ஒரு பயணத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்பதே என்னுடைய நம்பிக்கையாகக் காணப்படுகிறது. அதுவே எங்களுடைய எதிர்பார்ப்பாகவும் காணப்படுகிறது.

அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதோடு நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அபிவிருத்திகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். எதிர்காலத்திலே இலங்கை நாட்டிலே நல்லதொரு அரசியல் தீர்வோடு சக்திமிக்க, வளமான, அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.– என அவர் மேலும் தெரிவித்தார்.

### அல்லைப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு விலகி ஏற்பட்ட விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தீவகம் அல்லைப்பிட்டிச் சந்தியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தகர் ஒருவரின் வாகனமே விபத்துக்குள்ளாகியது. அவரது உறவினரான வயோதிபப் பெண்ணே அதிர்ச்சியில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வேலணையிலிருந்து ஊர்காவற்றுறை – யாழ்ப்பாணம் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த கப்ரக வாகனம் அல்லைப்பிட்டிச் சந்தியில் விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் வாகனத்தில் பயணித்த வயோதிபப்பெண் உயிரிழந்தார். அதில் பயணித்த ஏனையவர் பாதிப்புகளின்றித் தப்பித்தனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ–07)

### மின்னல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மேயர் முஸ்ஸமில் தமது மகனுடன் சென்றிருந்தார்.

அவர்கள் இருவரையும் ஜனாதிபதியின் இல்ல அலுவலர்கள் முதலில் ஓர் அறைக்கு அழைத்துச் சென்று இருத்தினர். அந்த அறைக்குள் நுழைந்த ஆளுநர் முஸ்ஸமிலுக்கு அதிர்ச்சி.

அங்கு ஒரு முக்கிய அரசியல்வாதி ஏற்கனவே அமர்ந்திருந்தார். அவரும் ஜனாதிபதியைச் சந்திக்க வந்திருந்தவரே. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில் சென்றிருந்த மூத்த சட்டத்தரணி அவர். அந்த சட்டத்தரணி தமது கையுடன் எடுத்து வந்திருந்த நாட்டின் அரசமைப்புப் புத்தகம், அவருக்கு முன்னால் சோபாவின் டீப்போவில் இருந்தது.

அதையும், அந்த சிரேஷ்ட சட்டத்தரணியையும் பார்த்தும் ஆளுநர் முஸ்ஸமிலுக்கு ஏதோ மனதில் பட்டுவிட்டது போலும். பட்டென்று கேட்டு விட்டார்.

*"ஓ! நீங்கள்தானா ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர்...? உங்கள் வழிப்படுத்தலில்தானா ஜனாதிபதி இந்தக் காய் நகர்த்தல்களை எல்லாம் செய்கின்றார்...? இப்போதுதான் எனக்கு எல்லாம் விளங்குகின்றன....!"*– என்று அப்பாவித்தனமாக 'மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் விதமாக' கேள்வி எழுப்பினார் ஆளுநர் முஸ்ஸமில்.

அவரின் பார்வை 'நீங்கள்தானா தொட்டிலையும் கிள்ளி பிள்ளையையும் ஆட்டுவது...?' என்று கேட்பது மாதிரி இருந்திருக்கும் போல....

பதறிப் போனார் அந்தப் பிரமுகர்.

அவர் வேறு யாருமல்லர், ஜனாதிபதி சட்டத்தரணியும் கூட்டமைப்புப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பிதான் அவர்.

*"ஜனாதிபதி தனியாகச் சந்தித்துப் பேச வேண்டும் என்று அழைத்தார். அதுதான் வந்தேன். சில சமயங்களில் சட்ட ஆலோசனை குறித்து அவர் ஏதும் கேட்கக் கூடும். அதனால்தான் அரசமைப்பின் ஒரு பிரதியையும் கையோடு கொண்டு வந்தேன்."*

– என்று விளக்கம் கூற முற்பட்டார் சுமந்திரன்.

இதற்கிடையில், சுமந்திரன் தனித்து அமர வைக்கப்பட்ட அறைக்குள், ஆளுநர் முஸ்ஸமிலையும் மகனையும் அனுமதித்த விடயம் ஜனாதிபதிக்கோ அல்லது ஜனாதிபதியின் இல்லத்தில் விருந்தினரைக் கையாளும் உயர்மட்ட அதிகாரிகளுக்கோ தெரிந்து விட்டது போலும்.

அறைக்குள் அவசரப்பட்டு வந்த அதிகாரிகள் மெல்ல முஸ்ஸமிலையும் அவரது மகனையும் வேறு ஓர் அறைக்கு விரைந்து மாற்றினர்.

சுமந்திரன் ஏன் ஜனாதிபதியின் இல்லத்துக்குப் போனார், சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல் அப்படி என்ன மனம் விட்டுப் பேசினார் என்பதைத் துருவினேன்.

சில விடயங்கள் விளங்கின.

சட்டத்துறையில் சுமந்திரனின் வாதங்கள், ஹல்ஸ்டோர்ப்பில் மெச்சப்படுகின்றன, அரசமைப்புச் சிக்கல்கள் தொடர்பாக சுமந்திரன் எடுத்த நிலைப்பாட்டின்படிதான் உயர்நீதிமன்றத் தீர்ப்புகள், முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே தமது அரசமைப்பு விவகார சட்ட ஆலோசகராகத் தாம் சுமந்திரனைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்ற கருத்து ஜனாதிபதிக்கு இருப்பதாகத் தெரியவந்தது.

*"நாட்டின் தலைவருக்குப் பக்கச் சார்பில்லாத நடுநிலையான, மனதுக்குச் சரி எனப்பட்ட சட்ட ஆலோசனையைப் பின் நிற்காமல் வழங்குவேன்"*– என்று சுமந்திரன் ஜனாதிபதிக்கு உறுதிமொழியை வழங்கிவிட்டு வந்தார் என்பதை அறிய முடிந்தது.

அரசியல்வாதி சுமந்திரனாகவும் அவர் ஜனாதிபதியுடன் மனம் திறந்து பேசினார் என அறியவந்தது. அந்த விடயங்களைப் போட்டுடைப்பது இப்போதைக்குப் பொருத்தமற்றது. விட்டு விடுகிறேன்.

ஆனால், ஒன்றை ஒன்று மட்டும் கூறி வைக்கலாம்.

அண்மையில் – கடந்த 30 ஆம் திகதி – யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ். மாநகரசபை மைதானத்தில் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்!' நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கு பற்றினார் அல்லவா? அந்த நிகழ்வில் ஜனாதிபதிக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஆளுநர் சுரேன் ராகவன், பேசுவதற்கான தமது முறை வந்ததும் எழுந்து பேசப் போனார். அப்போது ஜனாதிபதி கண்ணசைத்து சுமந்திரனைத் தமக்குப் பக்கத்தில் வந்து அமரும்படி கோரினார்.

அப்போதுதான் *'உங்களுடன் நான் தனியே பேச வேண்டும்'*– என்று சொன்னாராம் ஜனாதிபதி.

*"உங்கள் வசதிப்படி சந்திப்போம்!"*– என்றார் சுமந்திரன்.

அடுத்ததற்கு அடுத்த நாள் (முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை) சந்திப்புக்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி சந்திப்பும் நடந்தது.

இப்படி ஒரு சந்திப்புக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அழைப்பு விடுத்து, சுமந்திரனிடம் இதே அரசியல் விடயங்கள் பேசியிருப்பாராயின் சில சமயங்களில் இன்று நாட்டின் அரசியல் போக்கு – தலைவிதி – இப்படி இருந்திருக்காமல் தலைகீழாக மாறியிருக்கும்.

பாவம் மைத்திரி. பஸ்ஸைத் தவறவிட்டு விட்டார் என்று மட்டும்தான் சொல்லலாம்.

**- மின்னல் -**

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுபோன்ற வாழ்வியல் கட்டுமான அமைப்புகள் திரும்பவும் அழியாமல் இருக்க வேண்டுமானால் அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம் எனச் சுட்டிக்காட்டிய அவர், அதற்கு அரசியல் தீர்வு கட்டி எழுப்பப்பட வேண்டும் என்றும் கூறினார்.

யாழ் மாநகர சபைக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு மாநகர மைதானத்தில் சபை முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் நேற்று நடைபெற்ற போது அந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதேவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ் நகருக்கு ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாளாக இன்றைய நாள் அமைகின்றது. இந்தக் கட்டடம் எப்படியாக அழிந்தது என்பதும் வரலாற்றிலே பதியப்பட வேண்டிய ஒரு விடயம். நூலகம் ஒரு இரவிலே தீக்கிரையானது.

அது முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் காலத்தில் – இன்றைய பிரதம அமைச்சர் அன்றைய அமைச்சரவையில் இருந்த போது – அவருடைய அமைச்சரவை சகாக்கள் இருவருடைய பிரசன்னத்தின் தலைமையின் கீழ் அந்தச் சம்பவம் நடத்தப்பட்டது.

இந்த நகர சபை மண்டபம் இந்த மண்டபத்திற்கு அருகில் – அதாவது கோட்டையில் இருந்த – இராணுவத்தினரால் தொடர்ச்சியாக ஷெல் அடித்துத் தகர்க்கப்பட்டது.

ஆனால் பிரதம அமைச்சரும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அவர்களும் நேரடியாக வந்து இதை மீளக் கட்டியெழுப்புவதற்கான அடிக்கல் நாட்டுவதென்பது யாழ் வாழ் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் மட்டுமல்ல, இந்த நாட்டிலே வாழ்கின்ற அனைவருக்கும் கொடுக்கப்படுகின்ற ஒரு முக்கிய செய்தியாகவே அமைகிறது.

அந்தச் செய்தி என்னவென்றால், இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நிகழாது. நாங்களாகவே இதனை எங்களுடைய கைகளினாலே கட்டுகிறோம் என்பதாகும்.

ஆக, இது போன்ற அழிவுச் சம்பவங்கள் மீள நிகழாமல் இருப்பதாக இருந்தால் தொடர்ந்து ஓர் அரசியல் ஸ்திரத்தன்மை இந்த நாட்டிலே ஏற்படுத்தப்பட வேண்டும்.

வெறும் பௌதீக அபிவிருத்தி அதனை உறுதிப்படுத்தாது. அதற்கான முன்னெடுப்புக்களும் பல செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அது இறுதி செய்யப்படவில்லை. அது கைவிடப்படாமல் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

தொடர்ந்து நாம் இந்த நாட்டின் மக்களாக – இந்த நாட்டினுடைய படையினராலேயே கொன்று குவிக்கப்படாதவர்களாக – எங்களுடைய சொத்துக்கள் சேதப்படுத்தாதவர்களாக – நாங்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான அரசியல் அத்திபாரம் போடப்பட வேண்டும் என்பதை இந்த முக்கிய நாளிலே ஓர் அரசியல் பிரதிநிதி என்ற வகையில் நான் சொல்லி வைக்க வேண்டும். அது என்னுடைய கடமையாக இருக்கிறது.

யாழ்ப்பாணம் தமிழ் மக்களுடைய கலாச்சாரத்திலே எவ்வளவு முக்கியமானது என்பதை பிரதம அமைச்சர் நன்றாகவே அறிவார். ஆகையினாலே இந்தப் பகுதியிலே ஏற்படுகின்ற அபிவிருத்திப் பணிகளுக்கு அவர் விசேட முக்கியத்துவம் கொடுக்கின்றமையை நாம் மெச்ச வேண்டும். அதற்கு நன்றி செலுத்த வேண்டும்.

நாங்கள் இந்த நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் எங்கள் முழுமையான ஆதரவைக் கொடுப்போம்.

கடந்த நான்கு அல்லது நான்கரை ஆண்டுகளிலே என்ன நடந்தது, ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்கின்றவர்களுக்கு இந்தக் கட்டடங்கள் மட்டுமல்ல, இந்தக் கட்டடங்கள் என்ன செய்தியைச் சொல்லுகின்றன, இந்த மாற்றங்கள் எப்படியான உண்மையான மாற்றங்களாகப் பிரதிபலிக்கின்றன என்ற பாடம் மனங்களில் ஆழமாகப் பதியும்.

ஆனாலும் இன்னும் நிறையச் செய்ய வேண்டியுள்ளன. ஆனால் இந்த ஆரம்பங்கள் மிகவும் சிறப்பாக நடக்கின்ற காரணத்தினாலே அவற்றுக்குத் தலைமை தாங்கி முன்னெடுக்கின்ற பிரதம மந்திரிக்குத் திரும்பவும் என்னுடைய வாழ்த்துக்களையும் நன்றிகளையும் சொல்லிக் கொள்கிறேன். – என்றார்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கவின் முன்பாக இதனைக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மாநகர சபை மைத்தானத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் பேச்சைக் குறைத்து கடினமாக உழைக்கவேண்டும். யாழ். மாநகரசபையின் வரலாற்றை யாரும் மறக்க முடியாது. அது மறக்கக் கூடிய வரலாறு அல்ல. ஏனெனில் அது மக்களின் கண்ணீரிலும் இரத்தத்திலும் உறைந்துள்ளது. இப்போது அழிந்த மாநகர சபை மண்டபம் மீண்டும் கட்டியெழுப்படவுள்ளது. இது அபிவிருத்தியில் ஓர் வரலாற்றுத் திருப்புமுனை என்று கூறலாம்.

யாழ்ப்பாணம் மாநகர சபை இலங்கை சுதந்திரம் அடைந்து ஒரு வார காலத்திலேயே உருவாக்கப்பட்டுவிட்டது. அப்போதிலிருந்தே இயங்கி வந்தது. நாட்டில் இடம்பெற்ற வன்முறையான காலத்தில் மாநகர முதல்வராக இருந்த அல்பிரட் துறையப்பாவும் படுகொலை செய்யப்பட்டார். இவ்வாறாக பல வரலாறுகள் உள்ளன. எனவே இந்தக் கட்டடம் அமையப்பெறுவது யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திப் பயணத்தில் புதிய திருப்பு முனையாக அமைய வேண்டும்.

தேர்தல் காலத்திலாவது யாழ்ப்பாணம் மீது கரிசனை காட்டுவதையிட்டுச் சந்தோசம் அடைகின்றேன். வெறுமனே சின்னமாக இருக்காது எமது அடிப்படை அரசியல் சிந்தனைகளை மாற்றக் கூடிய வகையில் அமைய வேண்டும்.

வெறுமனே இந்த கட்டடத்தைக் கட்டி முடிப்பதுடன் மட்டுமல்லாது வடக்கு மாகாண மக்களுக்கு அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மக்களுக்கு ஜனாயகத்தைக் கட்டி எழுப்பும் கேந்திர நிலையமாக யாழ் மாநகர சபை மண்டபம் அமைய வேண்டும் – என்றார். (ஐ-07)

## டிப்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர் டிப்பர் வாகனத்தில் ஏறிச் சாரதியுடன் சினேகபூர்வமாகப் பேசிவிட்டு இறங்கியபோது, தவறி விழுந்து சில்லுக்குள் சிக்கி உயிரிழந்தார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவருகிறது.

விபத்தில் முரசுமோட்டை, ஐயன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த அல்வின் அனுரா என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. விபத்து இடம்பெற்றமை தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நல்லூர்க் கோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவராலும் போற்றப்படக் கூடிய கட்டடமாக கட்டியெழுப்புவோம்.

– இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ் மாநகர சபைக் கட்டடத்திற்கு அடிக்கல்லை நாட்டும் நிகழ்வு மாநகர மைதானத்தில் முதல்வர் ஆர்னோல்ட் தலைமையில் நேற்று நடைபெற்ற போது நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்த கொண்டு அடிக்கல்கலை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆட்சிக்கு வந்த முதல் ஒரு வருட காலத்தில் நாம் எதனையும் செய்யவில்லை என்று பலரும் எம்மைத் திட்டித் தீர்த்திருந்தாலும், இப்போதைய ஐந்து வருட ஆட்சிக் காலத்தில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் என்று குறிப்பிட்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, குறிப்பாக வடக்கில் அதிக முக்கியத்துவம் கொடுத்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற அதே நேரத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான அரசியற் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாகவும் யாழில் வைத்து தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வு உட்பட வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிஎங்களுடன் கைகோர்த்துக் கொள்ளுங்கள் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் இன்று யாழ்ப்பாண நகர மண்டபத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டுள்ளோம். இங்கு அமைக்கப்படவிருப்பதான நகர மண்டபம் மிகவும் ஓர் அழகிய மண்டபமாக இருக்கப் போகிறதென்பதை இங்கு நாங்கள் குறிப்பிட வேண்டும். இங்குள்ள நல்லூர்க் கோவில் எந்தளவிற்கு அழகிய கட்டடமாக எழுந்து நிற்கின்றதோ அதே போல இந்த நகரக் கட்டடத்தையும் அழகான, எளிமையான கட்டடமாக, அனைவராலும் போற்றப்படக் கூடிய கட்டடமாகக் கட்டியெழுப்புவோம்.

ஆகவே இந்தக் கட்டடம் வெறுமனே எழுப்பப்படும் ஒரு கட்டுமானம் அல்ல. உண்மையிலையே, ஒரு புதிய யாழ்ப்பாண நகரைக் கட்டியெழுப்புவதற்கான மாபெரும் திட்டத்தின் அங்கமாகத்தான் இந்தக் கட்டடம் கட்டியெழுப்பப்படுகிறது.

இந்த இடத்திலே யாழ் மாநகர பிதா இல்லாவிட்டால் இந்தக் கட்டடம் அமைந்திருக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏனெனில், அந்தளவிற்கு நகரபிதா இந்தக் கட்டடம் எப்போது வரப்போகின்றது, எப்போது நிதி ஒதுக்கப் போகின்றீர்கள், எப்போது ஆரம்ப வேலை செய்யப் போகின்றீர்கள் என்று எந்தச் சந்தர்ப்பங்களிலும் எங்களுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பார். இதனை என்னிடம் கேட்பார். அதே போல அமைச்சரிடமும் கேட்பார். இப்படியாக, இந்த யாழ் மாநகரத்தை கட்டியெழுப்பும் பணி நடைபெறுகின்ற நிலையில் அவரைப் பாராட்ட வேண்டும். இவ்வாறானவர்கள்தான் இவ்வாறான முயற்சியின் போது எங்களுக்குக் கட்டாயமாகத் தேவையானவர்களாக இருக்கின்றார்கள். அவ்வாறானவர்கள் கைகோர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள் எனக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த மாநகரம் யுத்தத்தின் காரணமாகத்தான் சிதைவுக்குள்ளாகியது. அழிவுக்குள்ளாகியது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் இந்த மனநிலையை மாற்றி, நிலைமையைக் கட்டியெழுப்புவதற்காக நாங்கள் ஆட்சிக்கு வந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தோம். அது 1987 ஆம் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதே போல 2002 ஆம் ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதே போல தற்போதும் அந்த முயற்சிகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

யுத்தகாலத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற பிரதேசங்கள் அபிருத்தியடைந்தன. ஆனால் யாழ்ப்பாணம் அழிவடைந்தது. ஆகவே தான் 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த போதே கட்டாயமாக யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற திடசங்கற்பத்தை நாங்கள் கொண்டோம்.

எமது நாட்டின் கலாசாரத்தைப் பொறுத்தமட்டில், நாட்டின் கலாசார பின்புலத்தை பொறுத்தமட்டில், யாழ்ப்பாணம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக இருக்கின்றது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

நல்லூர் நகரம்தான் தமிழ் மக்களின் கேந்திர பிரதேசமாக இருந்த இடம். அந்த மாளிகையில் சிதைவடைந்த பகுதிகளை நாங்கள் இப்பொழுதும் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே அமைச்சர் தயாரித்து சமர்ப்பித்துள்ள திட்டத்தின்படி கட்டாயமாக நாங்கள் இந்த மாநகரத்தை கட்டியெழுப்புவோம் என்ற விடயத்தைச் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

மேலும் இத்தகைய அபிவிருத்திகளுக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய நிதி நன்கொடைக்கும் நன்றி கூற வேண்டும். அடுத்ததாக கலாசார மத்திய நிலையத்தை அமைக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்றும் கூறுகிறேன். அதே சந்தர்ப்பத்தில் இந்த நகர மண்டபத்தை நாங்கள் கட்டாயமாகக் கட்டியெழுப்புவோம். அதே போல் சந்தைத் தொகுதி கட்டுமான நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். நெடுந்தூரப் பயணிகளுக்கான கட்டப்பணிகள் பூர்த்தி செய்யும் தருவாயில் உள்ளது. அதனையும் நாங்கள் பூர்த்தி செய்வோம்.

குறிப்பாக இங்கு நகர பிதா கூறியிருப்பது போல கட்டட வடிவமைப்பின் படி கட்டடத்தை அமைப்போம் என்பதையும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். அதனூடாகத்தான் புதிய யாழ்ப்பாணத்தை எங்களால் கட்டியெழுப்ப முடியும். இந்த அனைத்து விடயங்களும் கடந்த ஐந்தாண்டுகளில் தான் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் முதலாவது ஆண்டில் எதுவும் செய்யவில்லை என்று சொல்லி எங்களைத் திட்டத் தொடங்கினார்கள். ஆனால் நாங்கள் படிப்படியாக முன்னேறி இப்போது பாரிய அபிவிருத்தி திட்டங்களைச் செய்து வருகின்றோம்.

இந்த அபிவிருத்தியுடன் யாழ்ப்பாணத்தில் புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றதான கருத்திட்டங்களையும் உருவாக்குவோம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பொருளாதார அபிவிருத்தியை நாங்கள் கட்டியெழுப்புவோம். பலாலி விமான நிலையத்தை நாங்கள் இப்போது யாழ்ப்பாண விமான நிலையம் என்ற பெயரில் அபிவிருத்தி செய்து வருகின்றோம். இதில் முதலாவது கட்டமாக இந்தியாவிற்கு மாத்திரம்தான் விமானப் பயணங்கள் இடம்பெறும். ஆனாலும் காலக்கிரமத்தில் அது சர்வதேச மட்டத்தில் அனைத்து நாடுகளுக்கும் பயணம் செய்கின்ற விமானங்களை தாங்கிய தளமாக மாறும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இதன் ஊடாகச் சுற்றுலாத் துறையும் அபிவிருத்தியடையும். ஆகவே சுற்றுலாப் பயணிகளை இந்தப் பிரதேசத்திற்கு ஈர்த்துக் கொள்வதற்கு – குறிப்பாகத் தீவுப் பிரதேசங்களுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும், அதற்கான மூலோபாயங்கள் என்னவென்று சிந்தித்து அதற்கான திட்டங்களை நாங்கள் உருவாக்கி வருகின்றோம். இதனை நாங்கள் பிரதான சுற்றுலா வலயமாக மாற்ற இருக்கின்றோம்.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தோம். அதே போல் அங்கிருந்த சிமெந்து தொழிற்சாலையை மீளக் கட்டமைத்து நாங்கள் அதை மீள இயக்கத் திட்டம் உள்ளது. புதிய தொழில்நுட்பத்துடன் கூடியதான விவசாயத்தைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாக இருக்கிறது. அதே போல ஐ.ரி. தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முயற்சிகளும் அதற்கான பயிற்சிகளும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

கிளிநொச்சி, பூநகரியையும் அபிவிருத்தி செய்ய நாங்கள் சிந்திக்கின்றோம். இதுவொரு பாரிய வேலைத்திட்டமாகவே இருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் வர்த்தகத்தையும் தொழில் முயற்சிகளையும் கட்டியெழுப்புவதற்காக புறம்பான நிதியத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்பதே எனது நோக்கமாக இருக்கிறது. இதனை நான் இப்போது கூறுகின்ற போது தொழில் முயற்சியாளர் என்ற ரீதியில் இங்கிருக்கும் சரவணபவன் உடனே கைதட்ட ஆரம்பித்து விட்டார்.

ஆகவே, இவ்விடத்தில் வந்து அவ்வாறான தொழில் முயற்சிகளைக் கட்டியெழுப்புவதற்கு குறைந்தபட்சம் பத்தாயிரம் கோடி ரூபாவாவது இருக்க வேண்டும். ஆகவே பாரிய பொருளாதார அபிவிருத்தி திட்டத்தை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து நாங்கள் முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதனூடாக யாழ்ப்பாணத்தை கட்டாயமாக மீளக் கட்டியெழுப்புவேன்.

அதே போல இதற்குப் பாதகமாக இருக்கின்ற போதை வஸ்துகளை நாங்கள் கட்டாயமாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

கடற்தொழில் மீன்பிடித் துறையை நாங்கள் இப்போது கரையோரமாக மேற்கொண்டுள்ளோம். அதை ஆழ்கடலுக்கும் எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆகவே இவ்வாறான பாரிய திட்டத்தை முறையாகச் செய்வதற்கு யாருமே திட்டமிடவில்லை. அதை நாங்கள் செய்திருக்கிறோம். அதற்கு உங்கள் ஒத்துழைப்பை தாருங்கள். எங்களோடு கைகோர்த்துக் கொள்ளுங்கள் என்ற விண்ணப்பத்தை – வேண்டுகோளை – உங்கள் முன் வைக்கிறேன். ஆகவே உங்கள் ஒத்துழைப்புடன் உங்கள் நேசக் கரத்துடன் யாழ் நகரை மீளக் கட்டியெழுப்புவோம். – என்றார்.

## சஜித்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கும் மற்றொரு கூட்டம் நேற்று கொழும்பு சுகதாஸ உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இதில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கீழ் மட்ட உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் வரையில், இவ்வாறான கூட்டங்களை நடத்துவதை நிறுத்துமாறு கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மைத்திரியின் மற்றொரு பகல் கனவு

**மத்திய வங்கி பிணை முறி ஊழல் வழக்கின் பிரதான சந்தேகநபர் என்று இலங்கைத் தரப்பினால் முன்னிலைப் படுத்தப்படும் முன்னாள் இலங்கை வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை சிங்கப்பூரில் இருந்து நாடு கடத்துவதற்கான வேலைகள் எல்லாம் பூர்த்தியாகி விட்டன என்ற மாதிரியில் சில விடயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்துவதற்காக சிங்கப்பூர் அரசு கோரிய ஆவணங்களை – சுமார் 21 ஆயிரம் பக்கங்கள் கொண்ட தஸ்தாஜேுக்களை – சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்கு முன்னர் அது தொடர்பான பத்திரங்களில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் தாம் ஒப்பமிடுகின்ற படத்தைக் கூட, தனது ஊடகப் பிரிவு ஊடாக செய்தியாக – தகவலாக – வெளியே விட்டிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரியார்.**

**இந்தப் பிணைமுறி ஊழல் விவகாரம் 2015 – 2016 இல் நடந்தது.**

**இவ்வளவு காலமும் விட்டத்தைப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு இப்போது சுமார் மூன்று, நான்கு வருடங்கள் கழித்துத் தமது பதவிக் காலத்தின் கடைசி நேரத்தில் – கடைசிக் கந்தாயத்தில் – இவ்விடயத்தில் முறுகிக் கொண்டு புறப்பட்டிருக்கின்றார் மைத்திரியார்.**

**இலங்கையில் விசாரணைகளை எதிர்கொள்வதற்காக அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்துங்கள் என்ற இலங்கையின் கோரிக்கைக்கு அதற்குரிய ஆவணங்களை – ஆதாரங்களை – சமர்ப்பியுங்கள், அது குறித்துப் பரிசீலித்து முடிவு எடுப்போம் என்று கடந்த ஜனவரி மாதமே இலங்கைக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால் இதுவரைப் பதில் ஏதுமில்லை – என்று சிங்கப்பூர் வெளிவிவாகார அமைச்சு இரண்டொரு நாள்களுக்கு முன்னர் கூடக் குறிப்பிட்டிருந்தது.**

**கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இவ்விடயம் குறித்துப் பேசிய ஜனாதிபதி உரிய ஆவணங்கள், ஆதாரங்கள் அனைத்தும் சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டு விட்டன. இனி அர்ஜுன மகேந்திரன் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவது தான் மிச்சம் என்ற தொனியில் பேசினார்.**

**ஆனால், நேற்றுவரை அந்த ஆதாரங்கள், ஆவணங்கள், சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சைச் சென்றடையவில்லை என்பதுதான் நிலைமை.**

**அவை சென்றடைந்தாலும் கூட, தனது நாட்டுப் பிரஜையான அர்ஜுன மகேந்திரனை சிங்கப்பூர், இலங்கைக்கு நாடு கடத்துவது துர்லபமே என்கின்றார் வெளிநாட்டில் பல்கலைக்கழகம் ஒன்றின் சட்டப் பீடத் தலைவராகப் பணியாற்றும் சட்டவறிஞர் பேராசிரியர் பிரதபா மஹாநாம ஹேவா.**

***“இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் நாடு கடத்தல் ஒப்பந்தம் ஏதும் கிடையாது. சிங்கப்பூரின் நாடு கடத்தல் சட்டத்தின் கீழ் கொள்ளை, லஞ்சம், ஏமாற்றும் குற்றம் போன்றவற்றை இழைத்திருந்தால் மட்டுமேதான் தனது நாட்டுப் பிரஜை ஒருவரை சிங்கப்பூர் நாடு கடத்தும். ஆனால் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிரான குற்றங்கள் இந்த வகையறாக்குள் வகைப்படுத்தக் கூடியவை அல்ல.***

***“அதுவும் ‘நான் நாடு கடத்தப்பட்டால் அரசியல் பழி வாங்கலுக்கு உள்ளாக்கப்படுவேன்.’ – என்ற சாரப்பட அர்ஜுன மகேந்திரன் வாதிட்டால், குறிப்பாக ஒரு நிர்வாக அரசியல் தலைமையின் ஆட்சியின் முடிவு காலத்தில் இப்படி ஒருவரை அனுப்புவது அவருக்கு எதிராக அரசியல் பழி வாங்கல் நடவடிக்கை முன்னெடுக்கப்படலாம் என்ற வாதம் முன்வைக்கப்பட்டால், அத்தகைய தனது பிரஜையை சிங்கப்பூர் நாடு கடத்தாது என்றே நான் கருதுகிறேன்.”*** **– எனத் தெரிவித்திருக்கின்றார் சர்வதேச சட்ட விவகாரங்களில் அதிகம் புலமையுள்ள அந்தச் சட்டப் பேராசிரியர்.**

**இலங்கை அரசினால் சிங்கப்பூர் வெளிவிகார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள ஆதாரங்கள், ஆவணங்கள் அங்கு கிடைத்ததும் சிங்கப்பூர் நீதி அமைச்சினால் அவை பரிசீலிக்கப்படும்.**

**ஜனாதிபதி மைத்திரியார் பதவிக் கதிரையை விட்டு இறங்க முன்னர் – அது பெரும்பாலும் நவம்பர் கடைசி வாரத்தில் நடக்கலாம் – இந்த விவகாரத்தில் சிங்கப்பூரின் முடிவு ஏதும் வரும் என எதிர்பார்ப்பது சாத்தியமேயற்றது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.**

**தமது பதவிக் காலத்தில் அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்கு கொண்டு வரும் முயற்சியிலும் கூட மைத்திரியார் வெல்லப் போவதில்லை என்பதுதான் நிலைமை போலும் ...!**

# ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் இழுபறி நீடிப்பு ஐ.தே.கவின் பங்காளிக் கட்சிகள் பதைபதைப்பு



கொழும்பு,செப்.08

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளால், அதன் பங்காளிக் கட்சிகள் அதிர்ச்சியடைந்துள்ளன. இந்தநிலையில் நேற்று பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்த முயற்சி எடுத்திருந்தனர்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான இழுபறிகள் நீடிப்பதால், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியை உருவாக்குவதிலும் இழுபறிகள் காணப்படுகின்றன.

இதனால் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான முடிவை விரைவாக எடுக்க வேண்டும் என்று ஐ.தே.க. தலைமைக்கு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

சஜித் பிரேமதாச தாமே ஜனாதிபதி வேட்பாளர் என பரப்புரை செய்து வருகின்ற நிலையில், தாமே போட்டியிடவுள்ளார் என ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று முன்தினம் அறிவித்துள்ளமை, ஐ.தே.கவின் பங்காளிக் கட்சிகளைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஐ.தே.கவின் உள்முரண்பாடுகளால், தமது கூட்டணியின் வெற்றி வாய்ப்புப் பாதிக்கப்படும் என்ற அச்சமும், அதன் விளைவாக அரசியலில் தமது எதிர்காலம் குறித்த அச்சமும் பங்காளிக் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், ஜனநாயக தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்த முயற்சித்திருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பகல் முழுவதும் யாழ்ப்பாணத்தில் பொது நிகழ்வுகளில் பங்குபற்றியமையினால் அவர் கொழும்பு திரும்புவதற்காக அவர்கள் நேற்று மாலை காத்திருந்தனர்.

## கலைஞர்களுக்கான ‘கலைக்குரிசில்’ விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப். 08

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடா வருடம் வழங்கப்படும் 60 வயதுக்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த கலைஞர்களுக்குரிய விருதானது இவ்வருடம் முதல் ‘கலைக்குரிசில்’ விருது எனும் பெயரில் வழங்கப்படவிருக்கின்றது.

இவ்விருதுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்புகொண்டு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என்றும் மேலதிக தகவலுக்கு 021 – 2054105 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (இ

# ஆண்டான்குளம் பாலத்தை சீரமைக்க கோருகின்றனர் குமுழமுனை மக்கள்



முல்லைத்தீவு, செப். 08

முல்லைத்தீவு – குமுழமுனையை அடுத்துள்ள, ஆண்டான் குளம் பகுதியில் அமைந்துள்ள, ஆண்டான்குளம் ஆற்றுப் பாலத்தினை சீரமைத்துத் தருமாறு குமுழமுனை மக்கள் கோரியுள்ளனர்.

குமுழமுனை மக்களுக்கு, ஆண்டான்குளம் பாலத்திற்கு அப்பால், கால் நடைகள், விவசாய நிலங்கள் என்பன காணப்படும் நிலையில், இந்த பாலத்தினைக் கடந்து செல்வதில் அம்மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு உட்படுகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆண்டான் குளம் பாலம் மிக மோசமான முறையில் சேதமடைந்திருப்பதால், அதனூடாக போக்குவரத்துச் செய்வதில் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கின்றோம்.

மழைக் காலங்களில் அந்தப் பாலத்தை கடந்து செல்வதென்பது மிகவும் கடினமாக இருக்கும், குறிப்பாக மழைக்காலங்களில் நடந்தே அந்த பாலத்தினைக் கடந்து, சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்திற்கு மேல்நடந்துசெல்கின்றோம்.

மழைக்காலங்களில் பாலத்தினைக் கடக்கும் போது, ஆற்றினுள் விழுகின்ற அபாயம்கூட இருக்கின்றது.

அந்த பாலத்திற்கு அப்பால், பெரிய அளவில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்கின்றோம், கால்நடைகளை வளர்க்கின்றோம், நிலக்கடலைப் பயிர்ச்செய்கை என்பவற்றையும் மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே பயிர்ச்செய்கைக் காலங்களில் குறித்த ஆண்டான்குளம் பாலத்தினைக் கடந்து வயல்வெளிக்கு, பயிர்ச்செய்கைக்கான உள்ளீடுகளைக் கொண்டுசெல்வதிலும், பின் அறுவடைக் காலங்களில், அறுவடைகளை எடுத்துச் செல்வதில் பெரும் இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கின்றோம்.

எனவே எமது இடர்பாடுகளைத் தீர்க்கும் பொருட்டு, ஆண்டான் குளம் பாலத்தைச் சீர்செய்து தருமாறு உரியவர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். – என்றனர்.

**நாளை** 09.09.2019 திங்கட்கிழமை

நட்சத்திரம்: பூராடம் பி.ப 12.40 வரை
திதி : ஏகாதசி பி.இ 3.22 வரை
இராகுகாலம் : 7.34 – 9.04
சுப நேரம் : 12.04 – 1.34

பரிவர்த்தன ஏகாதசி விரதம்

# சு.க. – பெரமுன பேச்சில் சிறந்த புரிந்துணர்வாம்!

கொழும்பு, செப். 08

தனது கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலுள்ள பிரச்சினைகள் குறித்து இரு கட்சிகளுக்கும் சிறந்த புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற 8 ஆவது சுற்றுப் பேச்சு மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பு என்பவற்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதற்கே கடின முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுவரையில் நடைபெற்ற பேச்சுகளின் பின்னர் இரு கட்சிகளும் சில விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியுள்ளன எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அன்றைய கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்ப்பில் தயாசிறி ஜயசேகர, மஹிந்த அமரவீர மற்றும் லசந்த அழகியவண்ண ஆகியோர் கலந்து கொண்டனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்ப்பில் பஸில் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.



# மின்தடை

யாழ்ப்பாணம், செப். 08

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை –

யாழ் பிரதேசத்தில் –

வல்லை, உடுப்பிட்டி, பொக்கணை, தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பரா, அக்கரை, வளலாய், மூத்த விநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, சென்பீற்றர்ஸ் தேவாலயம், வேலக்கை பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி, குளப்பிட்டி, வராகி பாடசாலை, சாவற்காடு, காக்கைதீவு, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக் காடு, முள்ளியன், கீவில் தாளையடி, மருதங்கேணி, செம்பியன் பற்று, மாமுனை, குடாரப்பு, தாளையடி ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் –

மன்னார் பிரதேசத்தில் –

பெரியகுஞ்சுகுளம், பொயமுறிப்பு, தேக்கம் நானாட்டான் பிரதேசசபை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# சஹ்ரான் காசிமின் மடிக் கணினி இலங்கைப் பொலிஸாரிடம்தான்



கொழும்பு, செப். 08

ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் காசிமின் மடிக் கணினி, அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனமான எவ்.பி.ஐ இன் பொறுப்பில் உள்ளதாக வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மடிகணினி குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பிலேயே உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

அம்பாறை பகுதியில் இருந்து சஹ்ரான் பயன்படுத்திய மடிக்கணினி கண்டெடுக்கப்பட்டிருந்ததுடன், அந்த மடிக்கணினியில் இருந்து விசாரணைகளுக்கு தேவையான முக்கிய சாட்சியங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

# முதலாவது ஆண்டு நினைவுக் கூட்டம்



ஓயாத பொதுவுடமைப் போராளி ஆ.தங்கராஜாவின் முதலாவது ஆண்டு நினைவுக்கூட்டமும் நினைவு நூல் வெளியீடும் இன்று (08.09.2019 ஞாயிற்றுக்கிழமை) பி.ப.4 மணியளவில் கன்பொல்லை செஞ்சுடர் விளையாட்டுக் கழக மண்டப முன்றிலில் தோழர் ஆ.தங்கராஜா நினைவுக் குழுவினரின் ஏற்பாட்டில் இராஜ கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் வெ. யோகராசாவின் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பலரும் நினைவுரைகளை நிகழ்ந்தவுள்ளனர். (இ

# 12 கட்சிகள், இரு சுயேச்சைகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி



கொழும்பு,செப்.08

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு, 12 அரசியல் கட்சிகளும், 2 சுயேச்சைத் தரப்புகளும் விருப்பம் வெளியிட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விருப்பம் கொண்டுள்ளன என 12 அரசியல் கட்சிகள் எழுத்து மூலம் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளன.

அத்துடன் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடவுள்ளனர் என ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்த ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வசதியாக, போட்டியிட விரும்பும் கட்சிகளை முன்னரே தகவல் தருமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கோரியிருந்தது. (உ)

# வவுனியா வெடுக்குநாறி ஆலயத்தில் ஒலிபெருக்கி பாவனைக்கு அனுமதி



வவுனியா, செப். 08

வவுனியா வெடுக்குநாறி ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்தில் ஒலி பெருக்கி பாவனைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதி இலிங்கேஸ்வரரின் வருடாந்த பொங்கல் விழா தற்போது ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் பொங்கல் நிகழ்வின் முதல்நாள் அங்கு வருகை தந்த நெடுங்கேணி பொலிஸார் ஆலயத்தில் ஒலிபெருக்கி பாவனை மேற்கொள்ள வேண்டாம் என்று கண்டிப்பான உத்தரவை விதித்திருந்தனர்.

மேலும், ஆலய வளாகத்தைத் துப்புரவாக்கியமைக்கும் அதிருப்தி வெளியிட்டிருந்தனர். இதேவளை இந்த ஆலயத்திற்கு செல்லும் பிரதான வீதியை புனரமைப்பதற்கும் பொலிஸார் தடை விதித்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாருக்கு ஆலயத்தின் நலன் விரும்பிகள் சார்பில் தொடர் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

அத்தோடு, வவுனியாவில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்திற்கும் ஆலயத்தின் நிர்வாகம் சார்பில் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, ஆலயத்தில் ஒலிபெருக்கி பாவனையை மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு தொல்பொருள் திணைக்களத்தினால் நெடுங்கேணி பொலிஸாருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

(உ)



# சந்திரனுக்கு 2 கி.மீ. தொலைவில் தொடர்பை இழந்தது ‘லாண்டர்’!

## தோல்வியில் கண்கலங்கித் துவண்ட இஸ்ரோ தலைவரை கட்டியணைத்துத் தட்டிக் கொடுத்துத் தேற்றினார் மோடி



பெங்களூரு,செப்.08

இஸ்ரோ சார்பில் நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய ‘சந்திரயான்-2’ விண்கலம் கடந்த ஜூலை மாதம் 22ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்டது. இந்நிலையில் ‘சந்திரயான்-2’ விண்கலத் திட்டத்தின் முக்கிய மற்றும் சவாலான நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) அதிகாலையில் நடந்தது. சந்திரயான்-2 விண்கலத்தின் ‘விக்ரம் லாண்டர்’ நிலவை நெருங்கிய நிலையில் அதிலிருந்து சமிக்ஞை (சிக்னல்) எதுவும் வரவில்லை. அதில் இருந்து வரும் சிக்னலுக்காக விஞ்ஞானிகள் காத்திருந்தனர்.

இது குறித்து இஸ்ரோ தலைவர் சிவன் கூறுகையில், லாண்டரில் இருந்து கட்டுப்பாட்டு அறைக்கு சிக்னல் எதுவும் வரவில்லை. இந்தத் தரவுகளை ஆராய்ந்து வருகிறோம். நிலவிற்கு 2.1 கிலோ மீற்றர் தொலைவில் இருந்தபோது விக்ரம் லாண்டரில் இருந்து தகவல் துண்டிக்கப்பட்டது என்று கூறினார்.

இரவு 2 மணிக்கும் மேலாக பெங்களூர் இஸ்ரோ மையத்தில் விஞ்ஞானிகளுடனும் மாணவர்களுடனும் கலந்துரையாடிய மோடி, காலை எட்டு மணிக்கு மீண்டும் இஸ்ரோ மையத்திற்கு வந்து விஞ்ஞானிகள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

அப்போது இஸ்ரோ விஞ்ஞானிகளின் இமைப்பொழுதும் சோர்ந்து போகாத ஈடு இணையற்ற உழைப்புக்குத் தாம் தலைவணங்குகின்றார் என மோடி தெரிவித்தார். இடையூறுகளால் இலக்குகளில் இருந்து விலக மாட்டோம் என்று உறுதியளித்த மோடி விஞ்ஞானத்தில் தோல்வி என்பதே கிடையாது என்றார்.

முயற்சி முயற்சி, மீண்டும் மீண்டும் முயற்சிதான் என்றார் அவர். இஸ்ரோவின் விண்வெளி திட்டங்கள், அதன் சாதனைகளைப் பாராட்டிய மோடி விஞ்ஞானிகளின் குடும்பத்தினருக்கும் நன்றி தெரிவித்தார்.

நமது விஞ்ஞானிகளை எண்ணி நாடே பெருமைப்படுவதாக தெரிவித்த மோடி இஸ்ரோவின் எதிர்கால திட்டங்களுக்கு நாடும் அரசும் துணை நிற்கும் என்று உறுதியளித்தார்.

இப்போதும் கூட ‘ஒபிட்டர்’ நிலவை வெற்றிகரமாகச் சுற்றி வருகிறது என்று கூறிய மோடி இஸ்ரோ விஞ்ஞானிகள் மீதான முழு நம்பிக்கையை வெளியிட்டு எதிர்கால திட்டங்களுக்காக வாழ்த்து கூறினார்.

பின்னர் அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து அவர் புறப்பட்டார்.





அப்போது, பிரதமர் அருகே நின்றிருந்த இஸ்ரோ தலைவர் சிவன் கண்ணீர் விட்டு அழுதார். அவரை கட்டியணைத்த பிரதமர் மோடி தட்டிக் கொடுத்து தேற்றினார். (உ)



## லாண்டருக்கு என்ன நடந்திருக்கும்?

விண்கலத்தில் இருந்து பிரிந்து சென்று நிலவில் தரையிறங்க வேண்டிய விக்ரம் லாண்டர், தரைக்கட்டுப்பாட்டுடனான தொடர்பை இழந்தது விஞ்ஞானிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சனிக்கிழமை அதிகாலை 1.38 மணியளவில் 1,471 கிலோ கிராம் எடை கொண்ட விக்ரம் லேண்டர் 30 கி.மீ. தொலைவில் ஒரு நொடிக்கு 1,680 மீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருக்கும் வரை நிலைமை சரியாக இருந்தது.

அதாவது, நிலவின் தரைப் பகுதியில் இருந்து வெறும் 2.1 கிமீ தூரம் வரை விக்ரம் லாண்டர் சிறப்பாகச் செயல்பட்டு, திட்டமிட்டபடியே சென்று கொண்டிருந்ததாக இஸ்ரோ தலைவர் சிவன் கூறினார்.

அதன்பிறகுதான் விக்ரம் லாண்டருடனான தகவல் தொடர்பை தரைக்கட்டுப்பாட்டு மையம் இழந்ததாக அவர் அறிவித்தார்.

அதாவது, விக்ரம் லாண்டரை தொடர்ந்து கண்காணித்து வந்த விஞ்ஞானிகள், விக்ரம் தரையிறங்கும் முன்பு திடீரென அது திட்டமிட்ட பாதையில் இருந்து லேசாக விலகியதை உணர்ந்தனர். அதன் பிறகுதான் அதனுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

விக்ரம் லாண்டர் திட்டமிட்டபடி ஒவ்வொரு இலக்கையும் துல்லியமாகச் சென்றுசேரும்போதெல்லாம் இஸ்ரோ விஞ்ஞானிகள் கைதட்டி தங்களது மகிழ்ச்சியை அவ்வப்போது பகிர்ந்து கொண்டனர்.

மிகக் கடினமான பாதைகளை எல்லாம் லாண்டர் மிகச் சரியாக திட்டமிட்டபடி கடந்து சென்று கொண்டிருந்தது. கடைசி நிமிடத்தில் அதற்கு என்னவாகியிருக்கும்?

இஸ்ரோ வெளியிட்டிருக்கும் அதிகாரப்பூர்வ செய்தியில், லாண்டர் தரையிறங்கும் போது எதிர்பாராத வகையில் லாண்டரில் இருக்கும் மிக முக்கிய கருவி நிலவின் தரைப்பரப்பில் பட்டு அணைக்கப்பட்டிருக்கலாம் அல்லது மிக வேகமாக லாண்டர் நிலவின் தரைப் பகுதியில் மோதியதால், தகவல் தொடர்பை இழந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஆனால் நிலவைச் சுற்றிப் புகைப்படம் எடுக்க சந்திரயான்-2 விண்கலத்தில் அனுப்பப்பட்ட ஒபிட்டர் நிலவை வெற்றிகரமாகச் சுற்றி வந்து ஆய்வுகளைச் செய்து புகைப்படங்களை எடுத்து அனுப்பி வருகிறது என்று பெயர் கூற விரும்பாத இஸ்ரோ அதிகாரி கூறியுள்ளார்.

இந்த திட்டத்தின் ஆயுட்காலம் ஓர் ஆண்டு ஓர் ஆண்டு வரை ஒபிட்டர் நிலவைச் சுற்றி வந்து பல்வேறு புகைப்படங்களை எடுத்து இஸ்ரோவுக்கு அனுப்பும்.

அதுமட்டுமல்ல, நிலவில் தரையிறங்கும் முயற்சியில் பின்னடைவைச் சந்தித்திருக்கும் லாண்டரின் நிலை என்னவானது என்பது குறித்தும் இந்த ஒபிட்டர் எடுத்தனுப்பும் புகைப்படங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் எதிர்பார்த்துள்ளனர்.


சந்திரயான்-2 விண்கலம் மூன்று முக்கியமான தொகுதிகளோடு நிலவை நோக்கிச் சென்றது. ஒன்று ஒபிட்டர் (2,379 கி.கி) , விக்ரம் (1,471 கி.கி) பிரக்யான் (27 கி.கி) ஆகியவையே அவை.

## நிலவில் தரையிறக்கம் தோல்வி; ஆனால் திட்டம் தோல்வி அல்ல!

பெங்களூரு,செப்.08

‘விக்ரம் லாண்டர்’ தரையிறங்குவதில் பின்னடைவு இருந்தபோதிலும் இஸ்ரோவின் சந்திரயான்-2 திட்டம் தோல்வி அல்ல எனக் கூறப்படுகின்றது.

வெறும் ரூ.978 கோடி செலவில், ஹொலிவுட் வெற்றிப்படம் ‘அவெஞ்சர்ஸ் என்ட் கேம்’ ஐ விட குறைந்த பட்ஜெட்டில், சந்திரயான்-2 திட்டத்தை இந்திய விஞ்ஞானிகள் செயல்படுத்தியமையைக் கண்டு உலக விஞ்ஞானிகள் வியக்கிறார்கள்.



சந்திரயான் 2 பணிக்கு சுமார் 14 கோடி டொலருக்கும் குறைந்த அளவு செலவுதான் ஆகி உள்ளது. செவ்வாய் கிரகம் உள்ளிட்ட எதிர்கால விண்வெளி ஆய்வு பணிகளுக்கும் இந்த பணி பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது.

அமெரிக்கா தனது அப்பலோ பணிக்காக 10 ஆயிரம் கோடி டொலருக்கும் அதிகமாக செலவழித்தது.

இந்தத் திட்டத்தில் இந்தியாவின் ஒவ்வொரு அசைவையும் உலக நாடுகள் கண்காணித்து வருகின்றன. சந்திரனின் தென் துருவத்தை தொடுவதற்கு சற்று முன்பு லாண்டர் விக்ரமுடன் தொடர்பு இழக்கப்பட்டது.

சந்திரனில் தரையிறங்க இந்தியாவின் முதல் முயற்சி ஸ்கிரிப்ட்டாக இல்லாமல் போயிருக்கலாம், ஆனால் லட்சிய சந்திரயான் 2 பணி தோல்வியில் இருந்து வெகு தொலைவில் உள்ளது.

சந்திரனில் விக்ரம் லாண்டர் இறங்குவதில் தோல்வி ஏற்பட்டாலும் இந்த திட்டத்திற்கு ஒரு வருடம் பணி ஆயுள் இருப்பதால் சந்திரயான் 2 சுற்றுப் பாதை நடவடிக்கையில் தொடர்ந்து இருக்கும். தூரத்திலே இருந்து நிலவைக் கணிகாணிப்பு தொடரும்.

5 சதவிகித பணிகள் மட்டுமே இழக்கப்பட்டுள்ளன. ‘விக்ரம்’ லாண்டர் மற்றும் ’பிரக்யன்’ ரோவர் ஆகியன இழக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 95 சதவீதம் – அதாவது சந்திரயான் 2 சந்திரனை வெற்றிகரமாக சுற்றுகிறது – என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் இஸ்ரோ அதிகாரி தெரிவித்து உள்ளார்.

சந்திரயான் -2 சுற்றுப்பாதை நிலவின் பல படங்களை எடுத்து அடுத்த ஆண்டு வரை இஸ்ரோவுக்கு அனுப்பலாம்.

லாண்டருக்குள் இருந்த ரோவரின் ஆயுள்காலம் 14 நாள்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

## அண்டார்டிகாவைப் பச்சை நிறமாக மாற்றிய அரோரா ஒளி வெளிச்சம்

அண்டார்டிகாவில் உள்ள சீன ஆராய்ச்சி மையத்தின் மேல்பகுதியில் இரவு நேரத்தில் உருவான அற்புதமான அரோரா (aurora) வெளிச்சம் காண்போரை பிரமிப்பில் ஆழ்த்தியது.சுழன்று கொண்டு மிதந்த பச்சை நிற மேகங்களின் ஒளி, பனி போர்த்திய நிலப்பரப்பில் ரம்மியமாக எதிரொலித்தது. அண்டார்டிகாவில் உள்ள சீனாவின் ஜாங்ஷான் (Zhongshan) ஆராய்ச்சி நிறுவனத்துக்கு கடந்த டிசெம்பர் மாதம் வந்த ஆராய்ச்சியாளர்கள் குழு இந்த அரியவகை நிகழ்வை காட்சிப்படுத்தியுள்ளது.

அரோரா என்பது அண்டார்டிக் மற்றும் ஆர்டிக்கின் உயர் அட்சரரேகை பகுதிகளில் இயற்கையாக தோன்றக்கூடிய ஒரு ஒளி. சூரியனிடம் இருந்து வரும் ஒளியில் உள்ள சூடான துகள்கள் பூமியின் காந்த மண்டலத்தில் இடையூறு செய்வதாக கூறப்படுகிறது. சில சமயம் இந்த இடையூறுகளின் வலிமை சூரிய ஒளியில் உள்ள துகள்களின் பாதையை மாற்றும் அளவுக்கு அதிகமாக இருக்கும். இதனால் துகள்கள் திருப்பி அனுப்பப்பட்டு வளிமண்டலத்தின் மேலடுக்கில் படிந்து வெவ்வேறு வண்ணங்களில் இதுபோன்ற ஒளியை உமிழ்கின்றன.

## ஆப்கன் ராணுவம் - தலிபான் மோதலில் 16 பேர் உயிரிழப்பு

காபூல்,செப்.08

ஆப்கானிஸ்தான் நாட்டின் தக்ஹார் மாகாணத்தில் அரசுப் படைகளுக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மோதலில் 16 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டு மேற்கு பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் மற்றும் பல்வேறு சிறிய தீவிரவாதக் குழுக்களின் ஆதிக்கம் சமீபகாலமாக மீண்டும் தலைதூக்க தொடங்கியுள்ளது. சில பகுதிகளைக் கைப்பற்றி அங்கு உள்ளூர் வரி விதிப்பு உள்ளிட்ட நிர்வாகங்களைத் தங்கள் வசப்படுத்தியுள்ள தலிபான்கள் போட்டி அரசாங்கத்தை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பயங்கரவாதிகள் மீது ஈவிரக்கம் காட்டாமல் நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டின் ராணுவம் மற்றும் பொலிஸார் ஆகியோரை கொண்ட பயங்கரவாத ஒழிப்புக் கூட்டுப்படைகளுக்கு அதிபர் அஷ்ரப் கானி உத்தரவிட்டுள்ளார். இந்தப் படைகளுக்கு ஆதரவாக அரசுக்கு விசுவாசமான தன்னார்வலர்கள் படையும் இணைந்துள்ளது.

இந்தநிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் வடக்கு பகுதியில் தக்ஹார் மாகாணத்துக்குட்பட்ட தர்காட் மாவட்டத்தில் அரசுப் படைகளை குறிவைத்து தலிபான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்களில் இருவர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். அரசுப் படைகளின் எதிர் தாக்குதலில் 8 தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

## சீனாவில் குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட பூனைக்குட்டி



சீனாவில் முதன்முறையாக பூனைக்குட்டி ஒன்று குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

சீனாவை சேர்ந்த இளம் தொழிலதிபர் ஹுவாங் யூ என்பவர், ஆசை ஆசையாக 'கார்லிக்' என்ற பூனைக்குட்டியை செல்லப்பிராணியாக வளர்த்து வந்தார். உரிய பராமரிப்புடன், மிகுந்த அன்பு காட்டி ஹுவாங் வளர்த்து வந்த 'கார்லிக்' அண்மையில் உயிரிழக்கவே, மனமுடைந்த அவர், குளோனிங் முறையில் பூனைக்குட்டியை உருவாக்க நிறுவனங்களை நாடினார்.

இந்த முயற்சியை கையில் எடுத்த சினோஜீன் என்ற நிறுவனம், வெற்றிகரமாக வெள்ளை மற்றும் சாம்பல் நிறத்திலான பூனைக்குட்டியை குளோனிங் முறையில் உருவாக்கியுள்ளது. இந்த பூனையானது அச்சு அசலாக தன்னிடம் இருந்த கார்லிக் பூனையை போல் இருப்பதாக மகிழ்ச்சி அடைந்துள்ள அதன் உரிமையாளர் ஹுவாங், இதற்கென சுமார் 25 லட்சம் ரூபாயை(இந்திய நாணயப் பெறுமதி) செலவிட்டுள்ளார்.

குளோனிங் முறையில் பூனைக்குட்டியை உருவாக்கிய சினோஜீன் நிறுவனம், இதற்கு முன் 40 இற்கு மேற்பட்ட நாய்க்குட்டிகளை குளோனிங் முறையில் உருவாக்கியது. ஆனால் பூனைக்குட்டியை உருவாக்கியது இதுவே முதல் முறை என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் செல்லப்பிராணிகளின் தோற்றம் எதுவாக இருந்தாலும், உரிமையாளர்கள் அவற்றை குடும்பத்தின் ஓர் அங்கமாக பார்ப்பதால், அதிக பணம் கொடுத்தும் அவற்றை குளோனிங் முறையில் உருவாக்க முயற்சிப்பதாக தெரிவித்தது.

செல்லப்பிராணிகளை குளோனிங் முறையில் உருவாக்குவது பல நாடுகளில் சட்டவிரோதமாக கருதப்படும் நிலையில், சீன நிறுவனம் ஒன்று பாண்டா கரடி குட்டிகளையும், பூனைகள் உருவாக்கும் ஆராய்ச்சியும் கடந்த 20 ஆண்டுகளாக செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

(உ)

## பாகிஸ்தானில் ரிக்‌ஷா மீது லொறி கவிழ்ந்து விபத்து

### மாணவர்கள் எழுவர் சாவு

லாகூர்,செப்.08

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் ரிக்‌ஷா மீது லொறி கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 7 மாணவர்கள் உள்பட 8 பேர் பரிதாபமாக பலியாகினர்.

பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள நரோவால் சபர்வாலா தேசில் பகுதியில் மாணவர்களை ஏற்றிக் கொண்டு ரிக்‌ஷா ஒன்று சென்று கொண்டிருந்தது.

அப்போது, சரளைக்கல் ஏற்றி வந்த லொறி ஒன்று திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்து ரிக்‌ஷா மீது கவிழ்ந்தது. இந்த விபத்தில் 7 மாணவர்கள் உள்பட 8 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

தகவலறிந்து அங்கு விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



## வழக்கத்துக்கு மாறான கின்னஸ் சாதனைகள்

வழக்கத்துக்கு மாறான கின்னஸ் சாதனைத் தொகுப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்தவகையில் அமெரிக்காவில் கெட்டி கெஹ யோவா என்பவர் 17 அடி டைட்டானிய வளையத்தை உடலில் வைத்து சுழற்றி பெண்கள் பிரிவில் சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த லிசா மற்றும் கிரிஸ் பிட்மேன் தம்பதி 500 பிளாக்குகளை ஒரு நிமிடத்தில் உடைத்து சாதனை படைத்துள்ளனர்.

இங்கிலாந்தின் யோர்க்ஷயரில் கெவின் நிக்ஸ் மணிக்கு 80 கிலோ மீற்றரில் இயங்கும் அதிவேக தோட்டக் கூடாரத்தை வடிவமைத்து சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் ஒரேகானைச் சேர்ந்த பிரிட்டனி வால்ஷ் என்ற சேர்க்கஸ் கலைஞர் 40 அடி தூரத்தில் இருந்தபடி ஜிம்னாஸ்டிக் மேற்கொண்டபடி, காலால் அம்பெய்து சாதனை படைத்துள்ளார்.



## டோரியன் புயலால் சூறையாடப்பட்ட மார்ஷ் துறைமுகம்

பஹாமாஸ் தீவை புரட்டிப்போட்ட டோரியன் புயல் அங்குள்ள மார்ஷ் துறைமுகத் தையும் விட்டு வைக்கவில்லை.

மார்ஷ் துறைமுகத்தில் இருந்த கடைகள், பணியாளர் கூடங்கள், மருத்துவமனை, விமானங்கள் தரையிறங்கும் இடங்கள் ஆகியவை முழுமையாக சேதமடைந்தன. முறிந்து கிடக்கும் மரங்களும், உடைந்து கிடக்கும் படகுகளும் டோரியன் புயலின் கோரத்தாண்டவத்தை சொல்லாமல் சொல்கின்றன.

இந்தநிலையில், மார்ஷ் துறைமுகத்திற்கு அருகே வுள்ள திமட் என்று அழைக்கப்படும் நகரம் டோரியன் புயலால் பெரும் சேதத்தை சந்தித்ததுடன், அந்நகரமே துண்டாடப்பட்டுள்ளது. வீடுகள், கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகிக் கிடக்கும் கோரக் காட்சிகள் காண்போரைக் கண்கலங்க வைக்கின்றன.

டோரியன் புயலால் பஹாமாஸ் தீவில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் எனக் கூறப்படும் நிலையில், தி மட் நகரில் துர்நாற்றம் வீசுகிறது. கட்ட இடிபாடுகளில் சிக்கி உயிர்ச்சேதங்கள் நிகழ்ந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

உயிர் மற்றும் பொருள்சேதங்களாலும் அத்தியாவசிப்பொருள்கள் கிடைக்காமலும் அப்பகுதியில் உள்ள குடியிருப்புவாசிகள், துறைமுகத்தில் உள்ள மதுபானக்கடை, பல்பொருள் அங்காடிகளுக்குள் நுழைந்து, அங்குள்ள பொருள்களை பைகளில் அள்ளிக் கொண்டு செல்கின்றமையையும் காணமுடிகிறது.

# பதில் பிரதம நீதியரசர் பதவியேற்பு



பிரதம நீதியரசர் வெளிநாடு சென்றிருக்கின்றமையால் பதில் பிரதம நீதியரசராக புவனேக அலுவிஹாரே ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்னவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

# மறவன்புலவுப் பகுதியில் மின் காற்றாலை அமைக்கப்படுவதற்கு எதிராக போராட்டம்



தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மறவன்புலவு விவசாய கிராமத்தின் எல்லைப் பகுதியில் மின் காற்றாலை அமைக்கப்படுவதற்கு எதிராக நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) பொதுமக்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் மின் காற்றாலை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

எனினும், இந்தத் திட்டத்தை தமது பகுதியில் அமைக்க வேண்டாம் என கடந்த இரண்டு வருடங்களாக அங்குள்ள மக்கள் எதிர்ப்பு போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனையடுத்து, இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட மாட்டாது என அப்பகுதி மக்களுக்குப் பல தரப்புக்களாலும்வாக்குறுதி அளிக்கப்பட்டு வேலைகளும் இடை நிறுத்தப்பட்டிருந்தன எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இடை நிறுத்தப்பட்டிருந்த வேலைகள் மீண்டும் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடத்திற்குப் பேரணியாக சென்ற மக்கள், வேலைகளை உடனடியாக நிறுத்தி அங்கிருந்து வேலையாள்கள் மற்றும் அதிகாரிகளை வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

# சுதந்திரக் கட்சியுடன் பேச்சு; கோட்டாபயவுக்குத் திருப்தி!

கொழும்பு,செப்.08

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்ததாகவும் தனக்கு அக்கட்சியின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரு கட்சிகளுக்கு இடையிலான 8 ஆவது சுற்று கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றுள்ளது. இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இக்கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தயாசிறி ஜயசேகர, மஹிந்த அமரவீர மற்றும் லசந்த அழகியவண்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

## எங்கள்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு ஏன் போரட்டம் நடந்தது? எத்தனை பேர் இரத்தம் சிந்தினார்கள்? எத்தனை மாவீரர்களை இழந்திருக்கிறோம்? எத்தனை பேர் தங்களை இந்தப் போராட்டத்திற்காக அர்ப்பணித்தார்கள்? இவ்வாறு எல்லாம் நாம் கடந்து வந்த விடயங்களை மறந்து விட்டோமா? இப்பொழுது எமது மனங்களில் இருந்து மெல்ல மெல்ல எமது உரிமைகள் பற்றிய சிந்தனை மெல்லத் தூக்கி எறியப்பட்டுக் கொண்டே போகிறது.

நாங்கள் இப்போது சின்னச் சின்னக் குழுக்களாக, சின்னச் சின்ன சமூகங்களாக வேறுபட்டுப் போய் இருக்கிறோம், அதனை அரசாங்கமோ, பேரினவாதிகளோ திட்டமிட்டுச் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் பலமாக, ஒற்றுமையாக நாங்கள் எல்லோரும் நின்றால் அவர்களால் எம்மை ஒன்றும் செய்ய முடியாது.

எங்களை அவர்கள் ஏமாற்றுகிறார்கள். மாறி,மாறி வந்த அரசாங்கங்கள் எல்லாம் – மாறி, மாறி வந்த தேசியக் கட்சிகள் எல்லாம் – எங்களது இனத்தின் மீது சவாரி விடுவதிலேயே கவனம் செலுத்துகின்றனவே ஒழிய, எமது பிரச்சினையைத் தீர்த்துத் தமிழர்களுக்கு ஒரு சுயாட்சி வழங்குவதில் அவர்கள் எந்தக் கரிசனையும் கொண்டிருக்கவில்லை.

எங்களுக்கு என்று ஒரு சுயாட்சி இருந்திருந்தால், நாங்கள் சுதந்திரமாக வாழுகின்ற உரிமையைக் கொண்டிருந்தால், 2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் கொடுத்திருந்த இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபையைக் கூட இந்த அரசாங்கம் வழங்கியிருந்தால், இன்று இந்த வீதிகள் எல்லாம் காபெற் வீதிகளாக இருந்திருக்கும்.

எமது உற்பத்திகள் வெளிநாடுகளுக்குப் பறந்திருக்கும். யாருக்காகவும் காத்திருக்க வேண்டி இருந்திருக்காது.

வீதிகளைத் திருத்த முடியாமல், பாடசாலைகளை வளப்படுத்த முடியாமல், நாங்கள் நிதிளைத் தேட முடியாமல் திணறுகிறோம், இதற்காகத்தான் நாங்கள் போரடினோமா?

இப்போது தென்னிலங்கையிலே யார் வேட்பாளர்கள் என்பதற்கு அப்பால் அவர்கள் தமிழர்களின் நாடி பிடிக்கிறார்கள்.

தமிழர்கள் யாருக்கு வாக்களிக்கிறார்கள் என்பதை அவர்கள் பார்க்கிறார்கள்.

தென்பகுதி சிங்கள மக்களது வாக்குகள் சமனாகப் பகிரப்படும். அப்படி அவர்களின் வாக்குகள் சமமாகப் பகிரப்பட்டால் 51 ஆவது வீதமாகப் பெரும்பான்மையைத் தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழர்கள் இருக்கப் போகிறார்கள், அதனால் தமிழர்களுடைய வாக்குகளை வசீகரிப்பதற்காக பல்வேறு பட்ட தரப்புக்களை அனுப்புகிறார்கள்.

நேற்று முன்தினம் கூட குருநாகல் மாவட்டத்தில் சஜித் பிரேமதாஸவை வரவேற்கும் நிகழ்வில், இந்நாட்டின் டிஜ்ஜிடல் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க குறிப்பிட்டிருக்கிறார். இந்த நாட்டிலே ஐ.தே.கட்சியை அழித்ததில் தலைவர் பிரபாகரனுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தான் பெரிய பங்கிருக்கிறது என்று.

நான் நினைக்கிறேன் சுஜீவ சேனசிங்கவுக்கு அரசியல் அறிவு காணாது. அவர் எங்கே அரசியல் படித்தார் என்று தெரியாது. அவர் இப்போதுதான் அரசியலுக்கு வந்திருக்கிறார், அவர் முதலில் அரசியல் படிக்க வேண்டும்.

இந்தநாட்டில் முதலில் அகிம்சை ரீதியாகத்தான் தமிழர்கள் போராடினார்கள். காலிமுகத்திடலிலே அமிர்தலிங்கத்தின் மண்டையை அடித்து உடைத்தவர்கள் சிங்களக் காடையர்கள். தந்தை செல்வா அறவழியிலே போராடிய போது அவரைக் காயப்படுத்தி உதாசீனம் செய்தவர்களும் சிங்களக் காடையர்கள்தான்.

இதே ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அன்று யாழ்ப்பாண நூலகத்தை எரித்தார்கள். இந்த சுஜீவ சேனசிங்கவின் பாட்டன், பேரன், தகப்பனார்கள்தான் இந்த நூலகத்தைக் கொளுத்தினார்கள். சுஜீவ சேனசிங்கவின் பாட்டன், பேரன், தகப்பனார்கள் தான் எமது மண்ணிலே மக்களைக் கொலை செய்தார்கள், எண்பத்து மூன்றிலே மிகப்பெரும் இனப்படுகொலைகளை கட்டவிழ்த்து விட்டார்கள். பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எட்டப்படுகின்ற போதெல்லாம் இந்த மக்களை அழித்தொழிப்பதிலும் மூடி மறைப்பதிலும் கூடிய பங்கெடுத்தார்கள். இப்பொழுது தங்களுக்கு ஒரு பதவி கிடைக்கவில்லை என்பதற்காக, அல்லது தங்களுக்குள்ளே உள்ள உட்கட்சிப் பூசலை மூடி மறைக்கத் தெரியாமல், சஜித் பிரேமதாஸவுக்கும் ரணிலுக்கும் இடையில் உள்ள உள்ளக முரண்பாடுகளை தீர்க்க முடியாமல், எதிர்காலத்திலே தாங்கள் ஒரு கபினட் அமைச்சராக வரவேண்டும் என்கிற கனவோடு இருக்கின்ற சுஜீவ சேனசிங்க போன்றவர்கள் பாவிக்கின்ற பொருள்தான் இனவாதம்.

இந்த இனவாதம் எப்படிப் பாவிக்கிறார்கள் என்றால் தலைவர் பிரபாகரன், விடுதலைப் புலிகள் தங்களை அழித்தார்கள் என்று சொல்வதன் மூலம். பிரபாகரனை யார் தோற்றுவித்தார்கள்? புலிகளை யார் தோற்றுவித்தார்கள்? இதற்கான காரணம் என்ன? இதற்கான காரணம் எல்லாமே ஐக்கிய தேசியக் கட்சிக்குள்தான் அடங்கியுள்ளது.

இதற்கொல்லாம் காரணம் அவர்கள்தான், ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்றதெல்லாவற்றையும் செய்வேன் என்று கூறி இலங்கையிலே நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடைய வாரிசுகள்தான் இவர்கள்.

ஆகவே எமது இனம் அழிக்கப்பட்ட பொழுது, எமது இனம் வாழ முடியாது என்ற போதுதான் எங்களது இளைஞர்கள் துப்பாக்கி தூக்க வேண்டிய அல்லது துப்பாக்கி பற்றிய சிந்திக்க வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டது.

இவர் குறிப்பிடுவது போல அவர்களது தலைவர்களை அழிக்க வேண்டிய நோக்கமோ அல்லது அதற்கான தேவையோ எமக்கு இருக்கவில்லை. எங்களைப் பொறுத்தவரை எற்களது பிரச்சினையை தீர்ப்பதற்காகப் போராடினோம், அறவழியிலும் அகிம்சை வழியிலும் நாங்கள் போராடிய பொழுது நாங்கள் அழிக்கப்பட்டோம், தாக்கப்பட்டோம், கொல்லப்பட்டோம், நாங்கள இன ரீதியாகப் படுகொலை செய்யப்பட்டோம்.

ஆகவே தான் நாங்கள் துப்பாக்கிகளுக்குள் புகுந்து கொள்ள வேண்டிய அல்லது துப்பாக்கி ஏந்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனை அவர் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும்.

அந்தப் புரிதல் இல்லாத சுஜீவ சேனசிங்க போன்றவர்கள் ஒரு மாற்றுக் கருத்துக்களை சொல்லுகின்ற பொழுது சிந்திக்க வேண்டும். எவ்வாறு தழிழ் மக்களது வாக்ககளை பெற முனைகிறார்கல்? பிரபாகரனை அல்லது தழிழீழ விடுதலைப் புலிகளை காரணம் என்று சொல்லி விட்டு பிறகு தமிழ் மக்களின் வாக்குகள் வேண்டும் எனக் கேட்டால் அது எவ்வகை நியாயமாக இருக்கும்.? முதலிலே அவர்கள் தமது கருத்துக்களை இனரீதியாக இல்லாமல் யதார்த்தத்தை உணர்ந்து சொல்ல வேண்டும் என்பதே தமிழ் மக்களது எதிர்பார்ப்பு.

சிங்களம் இன்னும் அடிப்படை பௌத்த பேரினவாத சிந்தனையில் இருந்து மாறவில்லை. புதிதாக முளைத்து வளருகின்ற சுஜீவ சேனசிங்க போன்ற இளைய தலைவர்களிடம் அது இன்னும் குடி கொள்கிறது. சிங்கள் மக்களிடம் இன்னமும் அவர்கள் இனவாதம் சொல்லத்தான் விரும்புகிறார்கள். தமிழர்களுக்காக யார் போராடினார்களோ அவர்களை எதிர்ப் புலிகளாக காட்டத்தான் முனைகிறார்கள். சிங்களம் எப்பொழுதும் எங்களை அழிப்பதற்காக, இனவாதத்தைப் புகுத்தி எங்களை இல்லாமல் செய்வதற்காக, சிங்கள மக்களிடம் இனவாத்தை தொடர்ந்தும் விதைத்துக் கொண்டே இருப்பார்கள்.

இந்த நிலையிலேதான் நாம் ஒரு தேசிய இனமாக இந்த மண்ணிலே எமது அடையாளத்தை இழந்து போகாமல் நாங்கள் மனிதர்களாக வாழுகின்ற பக்குவத்தைப் பெற வேண்டும். இந்த வகையில் அபிவிருத்தி என்பது எமது இனத்துக்கான விடிவினைத் தந்து விடாது, ஆனால் அதுவும் தேவை. இதற்கும் அப்பால் நாம் தொடர்ந்தும் இன விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் மறந்து விடக் கூடாது. – என மேலும் அவர் தெரிவித்தார். ★

# ரணிலே வேட்பாளர்!

## பச்சைக்கொடியை அசைக்கிறது கூட்டமைப்பு

### துதி பாடுகிறார்கள் சுமந்திரன், மாவை, சித்தார்த்தன் குழுவினர்



- பனங்காட்டான் -

ஐக்கியதேசியக்கட்சியின் வேட்பாளர் ரணில் என்றால்தான் தமிழர்கள் வாக்களிப்பர் என்றசுமந்திரனின்அறிவிப்பும், புதிய அரசமைப்பு நிறைவேறாமல் போனதற்கு ரணில் அல்லர் மைத்திரியே முழுக்காரணமென்ற மாவை சேனாதிராசாவின் முழக்கமும், ரணில் தம்மைத் தாமே வேட்பாளராக அறிவிப்பதற்காக கூட்டமைப்பு முற்கூட்டியே வழங்கியுள்ள ஒப்பமிடப்பட்ட வெற்றுக் காசோலை.

ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பது தெரியாத நிலையிலும் தேர்தலுக்கான பரப்புரை வேகம் கொண்டுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் என்ற பெயரில் ராஜபக்ஷ குடும்பப் பிரதிநிதியாக கோட்டாபய களத்தில் இறக்கப்பட்டுள்ளார்.

ஜே.வி.பி.யின் வேட்பாளராக அனுர குமார திசநாயக்க தெரிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளார். இப்போது இவர்கள் இருவரும் அதிகாரபூர்வவேட்பாளர்களாக தத்தம் பாணியில் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இழுபறி முடிந்ததாக இல்லை. ஊரூராகச் சென்று தாமே ஜனாதிபதி வேட்பாளர் என்று பிரகடனம் செய்து வருகிறார் சஜித் பிரேமதாச. இவரைச் சுற்றி அமைச்சர்கள் கூட்டமொன்று திரிகிறது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரச்சினை எதுவுமே இல்லாதவர்போல வெளிநாட்டுப் பயணத்திலுள்ளார். கட்சி உடைந்தாலென்ன தாழ்ந்தாலென்ன அவர் தாம் எடுத்த முடிவில் உடையாத நிலைப்பாட்டிலிருக்கிறார். எந்தச் சந்தர்ப்பத்திலும் சஜித் பிரேமதாசவை வேட்பாளராக நியமிப்பதில்லையென்பதே அவரது உறுதி என்பது நன்றாகத் தெரிகிறது.

இதற்காகவே வேட்பாளர் பெயரை அவர் இழுத்தடித்துக் கொண்டிருக்கும் வேளையில், அதிரடி அறிவிப்பொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 68 ஆவது மாநாடு கடந்த வார இறுதியில் கொழும்பில் நடைபெற்றது. இதன் மேடையில் முன்வரிசையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் அமர்ந்திருந்தார்.

இங்கு மைத்திரி தமது தலைமை உரையில், ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி போட்டியிடுமென்றும், 2020ஆம் ஆண்டு இக்கட்சியே ஆட்சியமைக்குமென்றும் அறிவித்தார். அத்துடன் நிற்காது, மத்திய வங்கி மோசடியில் ஈடுபட்டவர்களையும், தற்போதைய ஆட்சியின் ஊழல்வாதிகளையும் சிறைக்கு அனுப்பப் போகிறார் என்றும் அறிவித்தார்.

கடந்த சில மாதங்களாக இவர் தாம் கூறுரைத்த எதனையும் செய்யத் தவறியவர் என்ற கருத்து நிலையில் பார்க்கையில், இப்போதைய அறிவிப்புகளையும் அது போன்ற வாய்ச்சவடால் என்று எண்ணலாமோ என நினைக்கத் தோன்றுகிறது.

ஆனால், இவரது இரண்டு அறிவிப்பு களும் மஹிந்த தரப்பையும் ரணில் தரப்பையும் சம வேளையில் கலக்கத்துள் தள்ளியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் ஆதரவில்லாமல் கோட்டாபய வெல்ல முடியாதென்பது மஹிந்தவுக்குத் தெரியும். மத்திய வங்கி மோசடியில் அமைச்சர் ரவி கருணாநாயக்க தண்டிக்கப்படுவாரானால், அது தமக்கான தோல்வியாகுமென்பது ரணிலுக்குத் தெரியும்.

அதே சமயம், கோட்டாபயவுக்கு எதிராக சுதந்திரக் கட்சி சார்பில் மைத்திரி ஒருவரை போட்டியிட இறக்கினால், அவர்களின் மொத்த வாக்கு பிளவுபடுவது ஐக்கிய தேசியக் கட்சிக்கு லாபமாக அமையுமென்ற கணக்கு ரணிலுக்குத் தெரியாததல்ல.

அதே கணக்கை மஹிந்தவும் மைத்திரியும் கூட தங்களுக்குள் வைத்திருப்பர்.

சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி புதிய கூட்டணியில் போட்டியிட்டால், அது ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கியைச் சிதறடிப்பது தங்களுக்கு வெற்றியைத் தரலாமென மைத்திரியும் மஹிந்தவும் தனித்தனியே நம்பலாம்.

ஜே.வி.பி.யின் வாக்குகளை சாதாரணமாக எவரும் எண்ணக்கூடாது. மஹிந்தவின் பொதுஜன பெரமுன, மைத்திரியின் சுதந்திரக் கட்சி ஆகியவற்றிலிருந்து ஜே.வி.பி. பெறும் வாக்கு அவர்களுக்குக் கிடைக்கும் மொத்த வாக்கில் 90 வீதமாக அமையும் வாய்ப்புண்டு.

இப்படித்தான் தேர்தல் வாக்களிப்பு இடம் பெறுமானால், முதற்சுற்றில் எந்த வேட்பாளரும் ஐம்பது வீதமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறும் வாய்ப்பு இல்லாமற் போகும்.

இப்படியான சூழ்நிலையில் சிறுபான்மையினரான தமிழர் – முஸ்லிம்களின் வாக்குகளையே சிங்கள வேட்பாளர்கள் வலம்வர வேண்டியிருக்கும். அங்கொன்றும் இங்கொன்றுமான சில்லறைத் தமிழ் தலைகள் தங்கள் ஆதரவை (?) அறிவிக்க ஆரம்பித்து விட்டன. இவர்கள் தமக்கு உதாரணமாக பேய்களையும் பிசாசுகளையும் அழைத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைவரின் நேர்த்தியான கொள்கைப் பிடிப்பையும்கூட இப்போது சில சிங்களத் தலைமைகள் ஆராதிக்க ஆரம்பித்துள்ளன.

இவர்களெல்லாம் எந்தளவுக்கு புனிதமான இயக்கத்தினதும் அதன் தலைவரதும் பெயர்களை உச்சரிக்கத் தகுதியானவர்கள் என்பது எப்போதும் கேள்விக்குறி.

தாம் ஜனாதிபதியானால் வடக்கின் பிரச்சினையை தீர்ப்பேனென்று தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை வடக்குக்குள் முடக்க முனைகிறார் கோட்டாபய. கடந்த நான்கு வருடங்களுக்கும் மேலாக தமிழர் பிரச்சினை பற்றி மறந்தும்கூட வாய்திறக்காதிருந்த சஜித் பிரேமதாச, இப்போது சிங்கள பௌத்த வாக்குகளை சுவீகரிப்பதற்காக இலங்கையில் ஒற்றையாட்சிதான் என்று மேடைகளில் முழங்குகிறார்.

ரணில் விக்கிரமசிங்க வழக்கம்போல அதிகாரப்பகிர்வு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு என்ற வாய்ப்பாட்டை மறக்காது ஒப்புவித்து வருகிறார். இது, மஹிந்த மீண்டும் பதின்மூன்று பிளஸ் தருவேன் என்று கூற ஆரம்பித்திருப்பது போன்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அணைத்துக் கொண்டு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கையிலிருந்த காலத்தில் புதிய அரசமைப்பை இழுத்தடித்த மைத்திரியும் ரணிலும் இப்போது ஆளை ஆள் மாறி குற்றம் சுமத்தும் நாடகம் அரங்கேறுகிறது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்த மைத்திரிபால சிறிசேன இதுவரை தமிழர் தீர்வு விடயத்தில் செய்யத் தவறிய அனைத்துக்கும் ரணிலே காரணமென்று குறை கூறினார்.

இதற்குப் பதிலளித்துள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புதிய அரசமைப்பு தடைப்பட்டதற்கு மைத்திரிபால சிறிசேனவே முக்கிய காரணமென்று சாடியுள்ளார்.

மைத்திரியும் மஹிந்தவும் கூட்டணி அமைத்து சதித்திட்டம் போட்டு நாடாளுமன்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இல்லாமற் செய்ததாலேயே புதிய அரசமைப்பு நிறைவேறாது போனது என்றும் மாவையர் மேலும் சுட்டியுள்ளார்.

மாவையர் இங்கு குறிப்பிடும் விடயம், கடந்த வருட இறுதியில் ரணிலை ஐம்பத்திரண்டு நாள்கள் பிரதமர் பதவியிலிருந்து இறக்கிய மைத்திரி, அந்தக் கதிரையில் மஹிந்தவை அமர்த்தியதே என்பது மறக்க முடியாது.

ஆனால், இதற்கு முன்னைய வருடங்களில் இந்த நல்லாட்சியில் ரணிலும் சேர்ந்துதான் அரசமைப்பை இழுத்தடித்தாரென்பது மறைக்க முடியாத வரலாறு.

என்னதான் சொன்னாலும், இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எல்லா வேளையிலும் ரணிலையே ஆதரிக்குமென்று இப்பத்தியில் பல தடவை குறிப்பிட்டமையை இங்கு நினைவூட்டுவது அவசியமாகிறது.

இதனை நிரூபிக்கும் வகையில் கூட்டமைப்பின் மூவரின் அண்மைய கருத்துகள் பிரதிபலிக்கின்றன.

கோட்டாபயவுக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்களென்று கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் இயக்கத் தலைவர் சித்தார்த்தன் அண்மைய நிகழ்வுகளில் அடுத்தடுத்து கூறி வருகிறார்.

ரணில் மீது மைத்திரி சுமத்திய குற்றச்சாட்டுகளை மறுதலிக்கும் மாவை சேனாதிராசா ரணிலை பிணையெடுப்பவராக கருத்துகளை வெளியிட்டு வருகிறார்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக ஒருபடி மேலே ஏறியுள்ள கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், நியூஸ் இன் ஏசியாவுக்கு வழங்கிய செவ்வியில், தமிழ் மக்களைப் பொறுத்தளவில் ரணிலே சிறந்த வேட்பாளர் என்றும், அவருக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிப்பர் என்றும், தமிழர்களின் ஏகபோக தலைவர் தாமே என்ற பாணியில் கருத்துக் கூறியுள்ளார்.

புதிய அரசமைப்பு குறித்த பிரச்சினைக்குத் தீர்வைக் காண ரணில் முயன்றாரென்றும், அதற்கான நகல் வடிவத்தைச் சமர்ப்பித்தவர் ரணிலே என்றும் இவருக்கு சுமந்திரன் இச் செவ்வியில் நற்சான்று வழங்கியுள்ளார்.

ரணில்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரென்று அறிவிப்பதற்கு முன்னரே, அவருக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிப்பர் என்ற சுமந்திரனின் கூற்றை கூட்டமைப்பின் முடிவாகவே கருத இடமுள்ளது. ரணிலுக்கு கூட்டமைப்பு வழங்கியிருக்கும் தொகை குறிப்பிடாது ஒப்பமிட்டு வழங்கப்பட்ட காசோலை இது.

சிங்கள வாக்குகள் பல கூறுகளாகப் பிரியுமானால் தமிழர் வாக்குகளை நம்பி ரணில் தம்மைத் தாமே வேட்பாளராக நியமிப்பாரென நம்பலாம்.

இப்போது பந்து ரணிலின் கால்களுக்குள்! அருகில் நின்று இதனை வெற்றிக்குழிக்குள் தள்ள கூட்டமைப்பு முன்வந்துவிட்டது. ✽



# மலம் கழிக்காமல் அடக்கி வந்ததால் ஏற்பட்ட விபரீதம்!

## 16 வயதுப் பெண் அநியாயச் சாவு

**இந்தச் சம்பவம் 2013 இல் இடம்பெற்றுள்ளது**

காலைக்கடன் என்பது அனைவருக்கும் மிக சாதரணமாக நடப்பது கிடையாது. சிலர் தேநீர் குடித்தால் தான் சீராக போகும் என்பார்கள், சிலர் இரவு வாழைப்பழம் சாப்பிட்டால் தான் சீராக போகும் என்பார்கள். ஆனால், இவை யாவுமின்றி காலையில் உங்களுக்கு மலம் சீராக எந்த பிரச்சினையும் இன்றி கழிந்தால் தான் உங்கள் உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கிறது என்று அர்த்தம்.

அதேபோல, தொடர்ந்து மலச்சிக்கல் ஏற்பட்டு வந்தால் உங்கள் உடலிலும், உணவுப் பழக்கத்திலும் ஏதோ தவறு நடந்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம். இதில் என்ன இருக்கிறது என்று எளிதாக இருந்து விட வேண்டாம். எமிலி என்ற 16 வயது நிரம்பிய ஐரோப்பிய பெண் மலச்சிக்கல் காரணமாக தனது உயிரையே இழந்துள்ளார்!

எமிலி டிட்டெரிங்டன் (Emily Titterington) எமிலி, 16 வயது நிரம்பிய இளம் பெண். இவர் இங்கிலாந்தில் உள்ள கார்ன்வால் எனும் பகுதியில் வாழ்ந்து வந்தார். எட்டு வாரங்களாக மலச்சிக்கலின் காரணத்தினால் மலம் கழிக்க முடியாது தவித்து வந்த எமிலி பரிதாபமாக இறந்துவிட்டார்.

### இதயம் செயலிழந்தது...

தீராத மலச்சிக்கலால் அவதிப்பட்டு வந்த எமிலிக்கு இதயம் செயலிழந்ததால் தான் பரிதாபமாக உயிரிழந்தார். இதற்கு காரணம் அந்த தீராத மலச்சிக்கல் தான். இந்த பிரச்சினையால் உடலின் மற்ற பாகங்கள் பெரிதானதாலும், இதய குழி சுருங்கியதாலும் தான் எமிலியின் மரணம் ஏற்பட்டது.

எமிலி கொஞ்சம் மதி இறக்கம் கொண்டவர் ஆவார். இவருக்கு குடல் பிரச்சினையும் இருந்து வந்தது. கடுமையான வலியும், பிரச்சினையும் இருந்த போதிலும், இதை எல்லாம் அவர் யாரிடமும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. இதற்கு அவரது மதி இறக்கம் ஓர் காரணமாக இருந்துள்ளது என மருத்துவர் அமன்டா ஜெப்ரி கூறியுள்ளார்.



குடல் பிரச்சினையால் தீராத வலியில் அவதிப்பட்ட வந்த எமிலி. தினமும் மலம் கழிக்க சென்றும், வலியின் காரணமாக மலத்தை அடக்கி வைத்திருந்து, கழிக்காமல் வந்திருக்கிறார். இது தான் எமிலியின் மரணத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

### குழந்தைகளுக்கு இருக்கும் பிரச்சினை

குழந்தைகள் நலன் மருத்துவரான ராய்னா க்ரோத், பெரும்பாலான குழந்தைகள், மலம் கழிக்காமல் அடக்கி வைத்துக் கொள்ளும் பண்புடையவர்களாக இருக்கிறார்கள். இதனால் ஏற்படும் வலியையும் அவர்களுக்கு வெளிப்படுத்த தெரிவதில்லை. இதன் காரணமாக மற்ற உடல் பாகங்களுக்கும் அபாயங்கள் ஏற்படும் வாய்ப்புகள் இருக்கின்றன.

### தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய எமிலியின் மரணம்

எமிலி சரியான நேரத்தில் அவரது குடல் பிரச்சினையின் காரணத்தினால் ஏற்பட்ட வலி பற்றி தெரியப்படுத்தியிருந்தால், அவருக்க சரியான சிகிச்சை அளித்து குணப்படுத்தியிருக்கலாம். இந்நேரம் எமிலி நம்மோடு உயிரோடு இருந்திருப்பார் என்று எமிலியின் உடல்நல மருத்துவர் ஜேம்ஸ் கூறினார்.

வீட்டில் பலமுறை மருத்துவரை அணுகவும், மருத்துவமனைக்கு செல்லவும் அழைத் தும் கூட எமிலி மறுத்திருக்கிறார். தனக்கு ஒன்றுமில்லை என்பது போல இருந்திருக்கிறார். குழந்தை மனம் மாறாத பெண் என்பதால் என்னவோ, தன் மனநிலையின் காரணமாகவே மரணமடைந்துவிட்டார்.

ஓர் நாள் அதிகாலை 4 மணியளவில் எமிலின் பெற்றோர், எமிலி சுயநினைவின்றி மலகூடத்தில் விழுந்துக்கிடப்பதை கண்டு அதிர்ச்சியுற்றனர். மற்றும் அவரது வயிறு பகுதி மிகவும் வீங்கிய அளவில் இருந்துள்ளது. மற்றும் கீழ் இடுப்பு பகுதியும், பிறப்புறுப்பு எலும்பு பகுதியிலும் வீங்கியிருந்ததை கண்டு அவரது தாய் அதிர்ச்சி அடைந்துள்ளார். பிறகு அருகில் இருந்த மருத்துவமனையில் எமிலி இறந்துவிட்டார் எனக் கூறிவிட்டனர்.

### மருத்துவர்கள் கருத்து

மலச்சிக்கலை மிக எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் உடலில் இருக்கும் கழிவுகளை அகற்றும் செயல்பாடு தான் இது. இதில் பிரச்சினை ஏற்பட்டால், கழிவுகள் உங்கள் உடலிலேயே தங்கிவிடும்.

இதனால் பல உடல்நல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. மற்றும் மற்ற உடல் பாகங்களையும் இது பாதிக்கும் அபாயம் இருக்கிறது என்று கூறியுள்ளனர். எனவே, உங்கள் வீட்டில் இருக்கும் குழந்தைகள் மீது இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

# சூரிய சக்தியில் இயங்கும் ஓட்டோ, உலகத்தையை சுற்றிவருகிறது!






சூரியச் சக்தியால் மட்டும் இயங்கும் இந்த சிவப்பு நிற தானியில் (ஓட்டோவில்) ஐவர் உலகத்தைச் சுற்றி வருகின்றனர்.

கரியமில வாயு வெளியேற்றம் ஏதுமில்லாமல் பயணம் செய்யமுடியும் என்ற விழிப்புணர்வை மக்களிடையே அதிகரிப்பது இவர்களின் நோக்கமாகும்.

பயணத்திற்கிடையே மறுபயனீட்டு எரிசக்தி பற்றி சமூகங்களுக்கு எடுத்துக் கூறுவர்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இளையர்கள், கடந்த ஆண்டு நவம்பரில் தங்களின் தானியில் பயணத்தைத் தொடங்கினர்.

அவர்கள் ஆஸ்திரேலியாவின் கரையோரத்தில் 3,000 கிலோமீற்றர் பயணம் செய்த பிறகு தாய்லாந்துக்குச் சென்றனர். அங்கிருந்து இந்தியாவிற்குச் சென்றுள்ளனர். தற்போது அவர்கள் பெங்களூரில் உள்ளனர்.

அடுத்து ஈரான், துருக்கி, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய இடங்களுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளதாக கூறியுள்ளனர்.

## வடக்கில் மட்டுமல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்டனர். இலங்கை மக்கள் தங்களின் நாட்டிலேயே ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ நடைமுறை சாத்தியமான முயற்சிகளை நாம் முன்னெடுக்கவேண்டும்.

– இவ்வாறு தெரிவித்தார் மேல் மாகாணம் மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க.

யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு யாழ். மாநகர சபை மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாண மாநகர மண்டபக் கட்டட நிர்மாணம் அரசியல் நோக்கம் கொண்டு செய்யப்படவில்லை. அதில் எவ்வித குறுகிய சிந்தனைகளும் இல்லை.நாம் ஆட்சிக்கு வந்தது முதல் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம். இந்தக் கட்டடத்தை அமைக்க வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க முன்னர் நான் இங்கு வந்திருந்தேன். இங்குள்ள அதிகாரிகள் அனைவரையும் இணைத்து கருத்துகள், அபிப்பிராயங்கள் எல்லாம் கேட்டே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எமது நாடு கடந்த காலங்களில் பல இன்னல்களைச் சந்தித்தது. நாட்டில் கிளர்ச்சி, உள்நாட்டுப் போர் காரணமாக பல பாதிப்புகளை சந்தித்தோம். வடக்கில் மட்டும் மக்கள் கொன்றழிக்கப்படவில்லை. தெற்கிலும் 60 ஆயிரம் இளைஞர், யுவதிகள் கொன்றழிக்கப்பட்டனர். இந்தப் பாதிப்புக்களினால் தமிழர்கள் அதிகமாகக் கனடாவிலும் சிங்களவர்கள் அதிகமாக ஆஸ்திரேலியாவிலும் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

எனவே நாட்டில் உள்ளவர்கள் புலம்பெயர் நாடுகளுக்குத் தப்பித்துச் செல்லாது இங்கு வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். மக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் ஒற்றுமையாக வாழ வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கு நடைமுறை சாத்தியமான விடயங்களை முன்னெடுக்க வேண்டும் – என்றார். (ஐ-07)

## யாழ். மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்திருந்த வளாகத்தில் புதிய மண்டபம் 235 கோடி ரூபா நிதியில் அமைக்கப்படவுள்ளது.

பெருநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தலைமையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட், நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ்ப்பாணம் மாநகர முன்னாள் ஆணையாளரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர் அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

உள்நாட்டுப் போர் காரணமாக 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் அழிவடைந்த யாழ்ப்பாண மாநகர சபையின் நிரந்தர மண்டபத்தை மீளவும் புதிதாக நிர்மாணிப்பதற்கு 235 கோடி ரூபா நிதி நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக ஒதுக்கப்பட்டது.

இதில் முதற்கட்டமாக இந்த வருடம் 70 கோடி ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆண்டுகளிலும் கட்டம் கட்டமாக நிதி விடுவிக்கப்படவுள்ளது. (ஐ-07)

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனித்துவமான உரிமைகளோடு நாங்கள் வாழ்வதற்கேற்ற விதமாக, எங்களுடைய அந்த அபிலாஷையை இந்த அரசாங்கம் உணர்ந்திருப்பதாகச் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், எங்களுடைய அரசியல் உரித்துக்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

இந்த அரசாங்கத்திற்கு எங்களுடைய மக்களுடைய ஆதங்கம் தெளிவாகப் புலப்பட்டிருக்கின்றது. அதனால் அரசாங்கம் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம் எனக் குறிப்பிட்ட அவர், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளில் மாறாத நிலைப்பாட்டைக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலே சமஷ்டியைக் கொண்டு வருவேன் என்று போட்டியிட்ட போதும், துரதிஷ்டவசமாகத் தமிழ் மக்கள் வாக்களிக்காத காரணத்தினால் தோல்வியுற நேர்ந்தது எனவும் கூறியிருக்கின்றார்.

போர் என்று நாங்கள் சொல்கிற பொழுது வேடிக்கைக்காக நாங்கள் போருக்குச் செல்லவில்லை என்று உங்களுக்குத் தெரியும். நாங்கள் வேறு வேலையில்லாத காரணத்தினால் போருக்குச் செல்லவில்லை. எங்களுடைய அரசியல் உரிமைகள், எங்களுடைய பிறப்புரிமை மறுக்கப்பட்டதன் காரணமாகத்தான் போராடுவதற்கு நாங்கள் தள்ளப்பட்டோம். ஆகவே அந்த உரிமையை வழங்கி சக, சம பிரஜைகளாக இந்த நாட்டில் நாம் வாழ வேண்டுமென்றுதான் கோருகின்றோம் என்றார் சுமந்திரன்.

'என்டர்பிரைஸ் சிறிலங்கா' தேசிய கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்த கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

'புலமை,பெருமை,புதுமை' என்ற தலைப்பிலே மிகவும் பொருத்தமான முறையிலே இக்கண்காட்சி இங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்திற்கு உகந்த வகையில் எங்களுடைய புலமையைப் பயன்படுத்த வேண்டும். அந்தப் புலமை குறித்து நாங்கள் எவ்வளவு பெருமையாக இருந்திருக்கிறோம். இன்றைக்கும் பெருமையோடு வாழ நினைக்கிறோம். அந்த நினைவுகளோடு புதுமையான புது யுகத்திற்குள்ளே நாங்கள் செல்வதற்கான பல வழிமுறைகளை, அரசாங்கம் பொருளாதார வழிமுறைகளாக என்னென்ன வித்தியாசமான முறையிலே உதவிகளாகக் கொடுக்கின்றதென்று இந்தக் கண்காட்சியின் ஊடாக புலப்படுத்துவதால் அரசாங்கத்திற்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

யுத்த காலத்திற்குப் பிறகு திரும்பவும் வடக்கு, கிழக்கு மீளெழுச்சி பெற வேண்டிய ஒரு சூழ்நிலையிலே, பத்து வருடங்கள் நிறைவாகின்ற இந்த வேளையிலே, தமிழ் மக்களுடைய கலாசார தலைநகரமாகிய யாழ்ப்பாணத்திலே இந்தப் பொருளாதார மீளெழுச்சி ஒரு முக்கியமானதொன்று. அதை என்னவிதமாக நாங்கள் உபயோகப்படுத்த வேண்டும், நவீன உலகத்தக்குள்ளே என்ன விதமாக நாங்கள் இதனைப் பிரயோசனப்படுத்த முடியுமென்று பலவிதமான வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற கண்காட்சியாக இது அமைந்திருக்கிறது.

என்டபிரைஸ் சிறிலங்கா என்கின்ற இந்த வேலைத் திட்டம் வடக்கிலே பலருக்கும் பிரயோசனமான ஒன்றாகத் தெரிந்திருக்கவில்லை. ஏனென்றால் இதற்கென்று கொடுக்கப்படுகின்ற நிதி உதவிகள் வங்கிகளின் ஊடாக மக்களின் கைகளில் வந்து சேர்வது கஷ்டமாக இருந்தது. வங்கிகளிடத்திலே செல்கின்ற போது பலவிதமான ஆதாரங்களையும் ஆவணங்களையும் அவர்கள் கேட்கின்ற காரணத்தினாலே ஒரு வகையில் இது தடைப்பட்டதாகவும், மக்கள் இதனாலே எங்களுக்கு உண்மையிலையே பிரயோசனம் இல்லை என்று சொல்கின்ற அளவிற்கும் வந்திருக்கிற இந்த வேளையிலே தான் இந்த நான்கு நாள் கண்காட்சி இங்கே ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையினாலே, இந்தக் கண்காட்சியின் மூலமாக நேரடியாக வங்கி உத்தியோகத்தர்களைச் சந்திக்கின்றதன் மூலமாக என்னென்ன வித்தியாசமான முறைகளிலே உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இங்கேயே மக்கள் நேரடியாகத் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஒரு வசதி வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக நாங்கள் அரசாங்கத்திற்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த அரசாங்கத்திற்கு எங்களுடைய மக்களுடைய ஆதங்கம் தெளிவாகப் புலப்பட்டிருக்கிறது. இதனைப் பயமில்லாமல் இந்த வேளையிலே சொல்ல வேண்டிய கடப்பாடு இருக்கிறது. யுத்தத்திற்குப் பிறகு நாங்கள் இந்த நாட்டிலே தலைநிமிர்ந்து சக பிரஜைகளாக, சமஉரித்துடைய பிரஜைகளாக, எங்களுக்குரிய உரிமைகளோடும் தனியான உரிமைகளோடும் நாங்கள் வாழ்வதற்கேற்ற விதமாக எங்களுடைய அந்த அபிலாஷையை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

இதிலே விசேடமாக அரசாங்கத்திற்கு தலைமை தாங்குகிற பிரதம அமைச்சரும் இன்றைக்கு நிதி அமைச்சராக இங்கே வந்திருக்கின்ற மங்கள சமரவீரவும் முதன்மையானவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. மங்கள சமரவீர அரசியலிலே பிரவேசித்த நாள் முதலாகத் தமிழ் மக்களுடைய உரிமை சம்பந்தமாக ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர். வெவ்வேறு கட்சிகளிலே அவர் இருந்திருந்தாலும் கூட, அவர் இருக்கின்ற எந்தக் கட்சியாக இருந்தாலும் கூட, தன்னுடைய இந்த நிலைப்பாட்டை ஒரு காலமும் மாற்றி அமைக்காதவர்.

ஒரு கால கட்டத்திலே மஹிந்த ராஜபக்ஷ அரசில் வெளிவிவகார அமைச்சராக இருந்த போது யுத்தத்தை அவர்கள் கொண்டு நடத்திய விதம் தவறானது என்று வெளிப்படையாகச் சொன்னதன் காரணமாகத் தன்னுடைய அமைச்சுப் பதவியை இழந்தவர் அவர். அப்படியாக அமைச்சுப் பதவியை இழந்த ஒரே ஒரு சிங்களத் தலைவர் அவரே என்பதை இந்த வேளையிலே நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரும்பவும் இந்த ஆட்சியிலே அவர் முதலாவதாக வெளிவிவகார அமைச்சராகக் கடமையாற்றி போதுதான் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14 ஆம் திகதி ஜெனிவாவிலே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலே அவர் உரையாற்றுகின்ற பொழுது என்னவிதமாக நல்லிணக்கத்தை நாங்கள் ஏற்படுத்துவோம் என்று சொன்னார். நிலைமாறுகால நீதியினுடைய நான்கு தூண்களை யும் அவர் வரையறுத்துச் சொல்லி, இறுதித் தூணாகிய மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதம் என்று சொல்லி, அதற்கான ஒரே வழி முறை ஒரு புதிய அரசமைப்பு யாப்பு உருவாக்கப்படுமென்ற ஓர் உத்தரவாதத்தை சர்வதேச சமூகத்திற்கு இலங்கை சார்பிலே வழங்கியவர் அவர்தான்.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசை சம்பந்தமாக மாறாத ஒரு நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாகக் கொண்டிருந்தவர் என்பது எங்கள் எல்லாருக்கும் தெரியும். 2002 ஆம் ஆண்டிலே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டவர். பேச்சு மூலம் தீரவு காண நினைத்தவர். 2005 ஆம் ஆண்டு தேர்தலிலே ஒரு சமஷ்டி ஆட்சியைக் கொண்டு வருவேன் என்று சொல்லி தேர்தலிலே போட்டியிட்டவர். ஆனால் துரதிஷ்டவசமாக ஒரு இலட்சத்து எண்பத்தையாயிரம் வாக்குளால் – அதுவும் வடக்கு மக்கள் வாக்களிக்காத காரணத்தினாலே – தோல்வியுற்றவர்.

ஆனால் 2015 ஆம் ஆண்டிலே இந்த உத்தரவாதம் கொடுக்கப்பட்ட பிறகு ஒரு பாரிய நடவடிக்கைகைய அவர் தலைமை தாங்கி நடாத்தினார். ஒரு புதிய அரசமைப்பை உருவாக்குவேன் என்று மங்கள சமரவீர சர்வதேச சமூகத்திற்குச் சொன்ன வாக்குறுதியை நடைமுறையிலே, செயற்பாட்டிலே நடப்பித்தவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. நாடாளுமன்றத்தை அரசியல் சபையாக மாற்றி, வழிநடத்தல் குழுவை அமைத்து, வழிநடத்தல் குழுவின் தலைவராக மூன்று வருட காலமாக அனைத்துக் கட்சிகளுடைய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காக மிகவும் முயற்சி செய்த ஒருவர்.

அந்த முயற்சியிலே பல தூரம் வெற்றியும் கண்டவர். ஏனென்றால் பலருடைய இணக்கப்பாட்டோடு இடைக்கால அறிக்கையாக ஒரு யாப்பு வரைவு கூட வந்திருக்கிறது.

இந்தப் பொருளாதார அபிவிருத்தி எங்களுடைய மக்கள் திரும்பவும் தங்களுடைய வாழ்க்கையை மீளெழுச்சி பண்ணி இந்த நாட்டிலே சக பிரஜைகளாக வாழ்வதற்கு அந்த அரசியல் உரித்தோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக இருக்கின்றது.

இந்த இரண்டையும் சமாந்தரமாக அரசாங்கம் முன்னெடுத்து வந்திருக்கிறது.

போர் என்று நாங்கள் சொல்கிற பொழுது நாங்கள் வேடிக்கைக்காக நாங்கள் போருக்குச் செல்லவில்லை என்று உங்களுக்குத் தெரியும். நாங்கள் வேறு வேலையில்லாத காரணத்தினால் போருக்குச் செல்லவில்லை. எங்களுடைய அரசியல் உரிமைகள், எங்களுடைய பிறப்புரிமை மறுக்கப்பட்டதன் காரணமாகத்தான் போராடுவதற்கு நாங்கள் தள்ளப்பட்டவர்கள்.

ஆகையினாலே நாங்கள் ஒரு மக்களாக இந்த நாட்டிலே வாழுகிற போது, புராதன யாழ்ப்பாண நகரத்திலே நடைபெறுகிற இந்த நிகழ்ச்சியிலே மக்களுடைய பொருளாதார எழுச்சிக்காக நாங்கள் விழாக் கோலம் பூணுகிற இந்த வேளையிலே, எங்களுடைய அந்த அரசியல் அபிலாஷைகளை நாங்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்க வேண்டும். இந்தப் பொருளாதார நடவடிக்கைகள் சுபீட்சமாக மாற வேண்டும். எங்களுடைய அரசியல் உரித்துக்களை நாங்கள் பெற்று வாழ்வதும் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கையோடு பேச்சை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். – என்றார்.

## சிங்கள, தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று வவுனியாவில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் பேரவை இரண்டு மாபெரும் மக்கள் பேரணியை நடத்தியிருக்கிறது. தமிழ் மக்களுக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வு வரைவொன்று அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கும் கையளிக்கப்பட்டிருக்கிறது.

பேரவையால் உருவாக்கப்பட்ட தீர்வு வரைவை அடியொற்றி வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் ஏகமனதாக மற்றொரு தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதுவும் அரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கபட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்ட விடயங்களை அடியொற்றியே இந்தத் தீர்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் ஜனாதிபதித் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியில் ரணில் போட்டியிட்டாலும் சஜித் பிரேமதாச போட்டியிட்டாலும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவே தமிழ்த் தலைமைகள் வாக்குக் கேட்பார்கள்.

தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளான காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நிரந்தரமான தீர்வை வழங்குதல், வடக்கு கிழக்கில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களத்தினால் மேற்கொள்ளபடும் நடவடிக்கைள் நிறுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்பது தொடர்பாகவும் தெற்கில் இருக்கக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் ஒரு தெளிவான செய்தியை மக்கள் எழுச்சிப் பேரணியூடாக வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது – என்றார். (ஐ)

## 'என்ரர்பிரைஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஆரம்பமாகியது .

இந்தக் கண்காட்சியைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் நேற்று மாலை தொடக்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில், கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், யாழ். மாநகர முதல்வர் ஆனல்ட், யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

9 வலயங்களின் கீழ் நேற்றிலிருந்து எதிர்வரும் 10 ஆம் திகதி வரை முற்பகல் 10 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதில் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த சுமார் 450 கண்காட்சிக் கூடங்கள் இடம்பெற்றுள்ளன. இதன் மூலமாக பயன்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அரசு பொதுமக்களை கேட்டுள்ளது. (ஐ -07)

**உலகை காப்பதற்கான ஆர்வத்தை இளையோரில் காண்கிறேன்**

மோதல்களின் இடையே இசைவின் கருத்துக் களைக்கண்டுகொண்டுபாலங்களைக்கட்டியெழுப்பி அமைதியை உருவாக்கி சந்திப்பு கலாசாரத்தின் மேன்மையை அனுபவியுங்கள். இன்று உங்களுக் கென இந்த நேரத்தை நான் ஒதுக்கியதற்காக எனக்கு நன்றி கூறினீர்கள். தன் மந்தையாகிய இளையோரோடு இருப்பதைவிட ஓர் ஆயருக்கு வேறு என்ன முக்கிய வேலை இருக்கப்போகிறது?

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

**இளையோர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்**

இளையோர்களே நீங்கள் முக்கியத்துவம் வாய்ந் தவர்கள் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும், நம்ப வேண்டும். நீங்கள் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, திரு அவைக்கும் முழு மனித குலத்திற்கு மான நிகழ்காலமும் வருங்காலமும் நீங்களே இக் காலத்தின் மகிழ்வு. வாழ்வதில் இருக்கும் மகிழ்வை உங்களில் காண முடிகிறது. இன்றைய உலகில் பகிர்ந்து வாழும் மகிழ்வே ஒப்புரவை உருவாக்கு கிறது.

# இறையன்பை தாங்கி செல்லும் தூதுவர்களாகப் பயணிப்போம்

## திருச்சிலுவைக் கன்னியர் சபை மாகாண தலைவி அருட் சகோதரி றொபினா தெரிவிப்பு



திருச்சிலுவைக் கன்னியர் சபை மாகாணத் தலைவி அருட்சகோதரி றொபினா தமது ஆசிச்செய்தி யில் இவ்வருட திருச்சிலுவை மகிமை விழாவானது எமக்கு இரு முக்கிய நிகழ்வுகளுடன் ஆரம்பிக் கின்றது.

முதலாவதாக எமது சபை சுவிற்ஸர்லாந்திலுள்ள மென்சிங்கன் என்னும் கிராமத்தில் ஆரம்பித்து 175 வருடங்களை ஐப்பசி 17ஆம் நாள் நிறைவு செய்கின் றது. எமது சபையானது கிராமப்புறங்களில் வாழும் பெண்களின் கல்வியை கருத்திற் கொண்டு ஆரம் பிக்கப்பட்ட போதும் வளர்ந்து சமூகத்தின் பல்வேறு தேவைக்கேற்ப பரந்து காணப்படுகின்ற போதும் எமது நிறுவுநரின் விருதுவாக்கான காலத்தின் தேவைக்கேற்ப பணி புரிவதே இறை சித்தம் என்ப தற்கேற்ப ஆசிரியப்பணியில் அக்கறை செலுத்தி னர்.

அடுத்து 1930 இல் ஏற்பட்ட தேவைக்கேற்ப இலங் கையின் வட மாகாணத்திலுள்ள ஊர்காவற்றுறை என்னும் தீவில் மூன்று அருட்சகோதரிகள் தமது சுகநலப் பணியை ஆரம்பித்தனர்.

நன்றிப் பெருக்குடன் இவற்றை நினைவு கூறும் இவ்வேளையில் இவை யாவும் இறைவனின் அருள்வரங்கள் என நான் நம்புகின்றேன். இவை யாவற்றுடனும் இணைந்து நாம் பாக்கியம் பெற்றவர் களாக கடவுளின் இரக்கம் நிறைந்த அன்பையும் குணப்படுத்தலையும் முழுமையையும் அளித்து எல்லோரும் ஒன்றாக இணைந்து புதுப்பிக்கும் நம் பிக்கையுடன் கூடிய உற்சாகம் நிறைந்த இறையன் பைத் தாங்கிச் செல்லும் தூதுவர்களாக பயணிப் போம்.




## 1982 முதல் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் பணி புரியும் திருச்சிலுவை சுகநல நிலையம்

1933 முதல் இந்தியாவில் மிஷனரி தாதிய அருட்சகோதரியான ஜேர்மனியைச் சேர்ந்த அருட் சகோதரி எட்முண்டா பவர் கொட்டியம் குயிலோன் திருச்சிலுவை மருத்துவமனையில் 28 ஆண்டுகள் பிரதம தாதியாக சேவையாற்றிய பின் 1982ம் வருடம் மாசித் திங்கள் 27 ஆம் நாள் அருட்சகோதரி இசபெல் லுடன் வைத்தியசாலையொன்றை நிறுவும் சிறப்பு பணி நோக்குடன் இலங்கைக்கு வருகை தந்தார்.

கார்த்திகை மாதம் 17 ஆம் நாள் மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. அரச மருத்துவமனைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் திருச்சிலுவை அருட்சகோதரிகளுக்கென ஒரு மருத்துவமனை வேண்டும் என்னும் நீண்டகால விருப்பம் நிறைவேறியது.




யாழ் அரசாங்க பொது வைத்தியசாலையில்

# 25 ஆண்டுகளாக பணியாற்றிய திருச்சிலுவைக் கன்னியர்கள்

## யாழ்.ஆயரின் வாழ்த்து



திருச்சிலுவைக் கன்னியர் இலங்கை மண்ணில் கால் பதித்து சுகநல சேவைப் பணியாற்றி 90ஆண்டுகளை நிறைவு செய்கின்ற வேளை திருச்சிலுவைக் கன் னியர் சபை முதல்வர் அருட்சகோதரி றொபினா மற்றும் இலங்கை மண்ணில் பணியாற்றும் திருச்சிலுவைக் கன்னியர் சபை சகோதரிகள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

இவர்களின் பணியை இங்கு ஆரம் பித்து அரும்பணியாற்றி மறைந்து போனவர்கள் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். இலங்கை மண்ணில் இவர்கள் கால் பதித்து சுகநல சேவைப் பணியாற்றி 90ஆண்டுகளை நிறைவு செய்கின்ற வேளை இவர்களின் சபை சர்வதேச ரீதியாக சுவிற்ஸர் லாந்து நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட 175 ஆவது ஆண்டையும் கொண்டாடுகின் றனர் என்பது சிறப்புடன் நோக்கப்பட வேண்டியதாகும்.

1930ஆம் ஆண்டு இலங்கை மண் ணில் கால் பதித்து யாழ் மறைமாவட்டத் தில் ஊர்காவற்றுறையில் சுகநல பணி களை ஆரம்பித்து 33 ஆண்டுகள் பணி யாற்றிய பின்னர் படிப்படியாக 1934 கொழும்புத்துறையில் முதியோர் இல்லத் தையும் 1954இல் குருநகரில் சுகநல நிலையத்தையும் நிறுவி அரும்பணி யாற்றி வருகின்றனர்.

திருச்சிலுவைக் கன்னியர் ஊர்காவற் றுறை வைத்தியசாலையில் சுகநல பணிகளை ஆற்றிக் கொண்டிருந்த போதே நான் பிறந்ததாக எனது அன்னை நன்றியுடன் தெரிவித்திருக்கிறார்.

1938 ஆம் ஆண்டு யாழ் அரசாங்க பொது வைத்தியசாலையில் பணிகளைத் தொடங்கிய இவர்கள் 25 ஆண்டுகள் அங்கு பணியாற்றியுள்ளனர் என்பது பலரும் அறியாத உண்மையாகும். யாழ் மறைமாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் இவர்களின் பணி இன்று பரவியுள்ளது என்பது பாராட்டப்பட வேண் டியதாகும்.

இலங்கை மண்ணில் சுகநல பணி கள் முதன்மை பெற்று பணி புரிபவர் களில் திருச்சிலுவைக் கன்னியரும் இடம்பெறுகின்றனர் என்பதில் ஐய மில்லை.

திருச்சிலுவைக் கன்னியர் சுகநல பணிகளில் சிறப்பு பெற்று ஆற்றி வரும் சுகநலபணிகள் இனிதே தொடர இறையாசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.

# சுக நல சேவையில் 90 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் இலங்கை திருச்சிலுவை கன்னியர்

அருட்சகோதரி விக்ரான் ஜேம்ஸ் –திருச்சிலுவைக் கன்னியர் சபை




14 செப்ரெம்பர் 2019 அன்று இலங்கை திருச்சிலுவைக் கன்னியர் சபையினர் திருச்சிலுவையின் மகிமை விழாவை தமது சபையின் பெருவிழா வாகக் கொண்டாடும் வேளை இலங் கையில் திருச்சிலுவைக் கன்னியர் சபையினர் சுகநல சேவை பணியில் 90 ஆண்டுகளை (1930 - 2019) நிறைவு செய்வதையும் திருச்சிலு வைக் கன்னியர் சபை சுவிற்ஸர்லாந்து நாட் டில் மென்சிங்கன் கிராமத்தில் 17 ஒக்ரோபர் 1844 ஸ்தாபிக்கப்பட்ட 175 ஆவது ஆண்டு நிறைவையும் மகிழ் வோடும் கொண்டாடுகின்றனர்.

கப்புச்சின் சபையைச் சேர்ந்த தியோ டோசியஸ் அடிகளாரால் அருட்சகோ தரிகள் பேர்னாடா ஹெய்ம்காட்னர், பெலிசியானா கிராமர், கொர்னேலியா ஆகியோருடன் சுவிற்ஸர்லாந்து நாட்டில் மென்சிங்கன் கிராமத்தில் 17 ஒக்ரோபர் 1844ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட திருச்சிலுவைக் கன்னியர் சபையானது இன்று 175ஆவது ஆண்டு நிறைவில் உலகின் நான்கு கண்டங்களில் உள்ள 18 நாடுகளில் பரந்து பணியாற்றுகிறது. மூன்று சுவிஸ் அருட்சகோதரிகளுடன் 1930ஆம் ஆண்டு இலங்கை ஊர்கா வற்றுறையில் சுகநல சேவை பணியை ஆரம்பித்த திருச்சிலுவைக் கன்னியர் சபை 90 ஆண்டுகளின் நிறைவில் இன்று இலங்கையின் ஒன்பது மறை மாவட்டங்களிலும் பாகிஸ்தானில் ஓர் மறைமாவட்டத்திலும் தன் கிளைகளைப் பரப்பி சேவையை ஆற்றும் ஓர் விருட் சமாகவும் திகழ்கின்றது.

1930 ஆம் ஆண்டு அருட்சகோத ரிகள் பெனடிற்ரா ஸ்ரொக்கர், ஒத்மா குறுன்ரர், மரியா கரோலா ஆகிய மூன்று அருட்சகோதரிகளும் தம் தலைமைச் சகோதரி லியோனியுடன் ஊர்காவற்றுறை படகுத் துறையை வந்தடைந்து தாதியப் பணியினை ஊர்காவற்துறை ஆதார வைத்திய சாலையில் ஆரம்பித்து தொடர்ந்து 33 வருடங்கள் பணியாற்றினர்.

அருட்சகோதரிகள் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேவையாற்ற ஆரம்பித்ததிலிருந்து யாழ்ப்பாணத்து மக்கள் இவ்வருட்சகோதரிகளை தமது யாழ் அரசாங்க வைத்தியசாலையிலும் பணியாற்ற வேண்டுமென வேண்டிக் கொண்டிருந்தார்கள்.

எனவே எட்டு வருடங்களின் பின் எதிர்பாராத விதத்தில் ஒரு சாத்திய நிலை உருவாகியது. பயிற்சியும் நல் அனுப வங்களும் நிறைந்த ஏழு அருட்சகோ தரிகள் 1938 ஆவணி 10 இல் வைத் தியசாலையின் வேலைத்திட்டத்தினை பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டார்கள்.



# 13 வகை சாபங்கள்

## அவற்றால் ஏற்படும் ஆபத்துக்கள்

நமது வாழ்வில் இன்பம் துன்பம், பகல் இரவு இருப்பது போல தான் வரமும் சாபமும் உண்டு. வரங்கள் என்று பார்த்தால் நாம் மிகவும் சந்தோஷப்படுவோம், சாபம் என்று எடுத்துக்கொண்டால் நாம் மிகவும் வருத்தப்படுவோம். சாபங்கள் மொத்தம் 13 வகையான சாபங்கள் இருக்கின்றனவாம். அவை என்ன, அந்த சாபத்தால் என்ன பிரச்சினைகள் வரும் என்பதை தெரிந்து கொள்ளுவோம்.

**பெண் சாபம்:**
பெண்களை ஏமாற்றுவதும், சகோதரிகளை ஆதரிக்காமல் இருப்பதாலும், மனைவியைக் கைவிடுவதாலும் வருகிறது. பெண் சாபம் ஏற்பட்டால் வம்சம் அழியும் என்கிறார்கள்.

**பிரேத சாபம்:**
இறந்த மனிதனின் உடலை வைத்துக்கொண்டு அவரை இழிவாகப் பேசுவதும், அவருடைய உடலைத் தாண்டுவதும், பிணத்தின் இறுதி காரியங்களைச் செய்யவிடாமல் தடுப்பதும், இறந்தவரை வேண்டியவர்கள் பார்க்க அனுமதி மறுப்பதும் பிரேத சாபத்தை ஏற்படுத்தும். இதனால் ஆயுள் குறையும் என்கிறார்கள்.

**பிரம்ம சாபம்:**
நமக்கு வித்தை கற்றுக்கொடுத்த குருவை மறப்பது, வித்தையை தவறாக பயன்படுத்துவது, மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்காமல் மறைப்பதனால் பிரம்ம சாபம் ஏற்படுகிறது. பிரம்ம சாபத்தால் படிப்பு இல்லாமல் போகும் என்கிறார்கள்.



**பூமி சாபம்:**
ஆத்திரத்தில் பூமியை சதா காலால் உதைப்பதும், பாழ்படுத்துவதும், தேவையற்ற பள்ளங்களை உண்டு பண்ணுவதும், அடுத்தவர் பூமியைப் பறிப்பதும் பூமி சாபத்தை உண்டாக்கும். பூமிசாபம் நரகவேதனையைக் கொடுக்கும்.

**கங்கா சாபம்:**
பலர் அருந்தக்கூடிய நீரை பாழ் செய்வதாலும், ஓடும் நதியை அசுத்தம் செய்வதாலும், கங்கா சாபம் வரும். கங்கா சாபத்தால் எவ்வளவு தோண்டினாலும் நீர் கிடைக்காது என்பது உண்மை.

**விருட்ச சாபம்:**
பச்சை மரத்தை வெட்டுவதும், கனி கொடுக்கும் மரத்தை பட்டுப்போகச் செய்வதும், மரத்தை எரிப்பதும், மரங்கள் சூழ்ந்த இடத்தை, வீடு கட்டும் மனையாக்குவதும் விருட்ச சாபத்தை ஏற்படுத்தும். விருட்ச சாபத்தினால், கடன் மற்றும் நோய் உண்டாகும் எனவே எச்சரிக்கை.

**தேவ சாபம்:**
தெய்வங்களின் பூஜையைப் பாதியில் நிறுத்துவது, தெய்வங்களை இகழ்வது போன்ற காரணங்களால், தேவ சாபம் ஏற்படும். தேவ சாபத்தால் உறவினர்கள் பிரிந்துவிடுவர்.

**சர்ப்ப சாபம்:**
பாம்புகளை கொல்வதாலும், அவற்றின் இருப்பிடங்களை அழிப்பதாலும், சர்ப்ப சாபம் உண்டாகும். இதனால், கால-சர்ப்ப தோஷமும் ஏற்பட்டு திருமணத் தடை ஏற்படும் என்கிறார்கள்.

**பித்ரு சாபம்:**
முன்னோர்களுக்கு செய்ய வேண்டிய திதி மற்றும் தர்ம காரியங்களைச் செய்யாமல் மறப்பதும், தாய்-தந்தை தாத்தா-பாட்டி போன்றோரை உதாசீனப்படுத்துவதும், அவர்களை ஒதுக்கி வைப்பதும், பித்ரு சாபத்தை ஏற்படுத்தும்.

**கோ சாபம்:**
பசுவை வதைப்பது, பால் மரத்த பசுவை வெட்டக் கொடுப்பது, கன்றுடன் கூடிய பசுவைப் பிரிப்பது, தாகத்தால் பசு தவிக்கும் போது தண்ணீர் கொடுக்காதது போன்ற காரணங்களால் கோ சாபம் ஏற்படும். இதனால், குடும்பத்திலோ வம்சத்திலோ எவ்வித வளர்ச்சியும் இல்லாமல் போகும்.

**ரிஷி சாபம்:**
இது கலியுகத்தில் ஆச்சார்ய புருஷர்களையும் உண்மையான பக்தர்களையும் அவமதிப்பது போன்றவற்றால் ஏற்படும். ரிஷி சாபத்தால், வம்சம் அழியும்.

**குலதெய்வ சாபம்:**
இது நமது முன்னோர்கள் பூஜித்த தெய்வத்தை மறக்காமல் இருப்பது. குல தெய்வ சாபத்தால் குடும்பத்தில் ஒரு போதும் மகிழ்ச்சி ஏற்படாமல் போகும்.

**முனி சாபம்:**
எல்லை தெய்வங்கள் மற்றும் சின்ன சின்ன தெய்வங்களுக்கு வழங்க வேண்டிய மரியாதைகளையும் பூஜைகளையும் மறப்பது முனி சாபத்தை ஏற்படுத்தும். முனி சாபத்த செய்வினைக் கோளாறு ஏற்படும். தேவ சாபம்: தெய்வங்களின் பூஜையைப் பாதியில் நிறுத்துவது, தெய்வங்களை இகழ்வது போன்ற காரணங்களால், தேவ சாபம் ஏற்படும். தேவ சாபத்தால் உறவினர்கள் பிரிந்துவிடுவர்.

# அமேசன் காட்டுத் தீயும் ஈழத்தமிழர்களான நாமும்!



நேரு குணரட்ணம்

அமேசன் காட்டுத்தீ இன்று உலகின் பேசு பொருள். வரவேற்கத்தக்க விடயம். இயற்கையுடனும் சுற்றுச்சூழல் பாதுகாப்புடனும் மோசமாக உரசிப் பார்க்கும் தலைவர்களும், அதன் தாக்கத்தின் பின் விளைவுகள் குறித்த அவ்வித அறிவோ அன்றி அது குறித்த எவ்வித கரிசனையோ அற்ற ஒரு பெரும் பகுதி மக்கள் கூட்டமோ, உள்ள உலகில் இவ்விடயம் எவ்வளவு தாக்கம் செலுத்தும் விடயமாக மாற்றம் பெறும் என்பதே கேள்வி... காட்டை அழித்தால் நாங்களும் அழிந்து போவோம் என்பதை தாங்கள் அழியும் வரை, இந்த மக்கள் கூட்டம் உணரப் போவதில்லை என்பதே கசப்பான உண்மை.

எனினும் எதிர்பாராத வட்டாரங்களிலான முயற்சி பெரும் நம்பிக்கை தருகிறது. ஆபிரிக் காவை ஒரு பெரும் பச்சை பெரும் சுவராக மாற்ற அங்குள்ள அரசுகளும் மக்களும் முனைந்து நிற்பது பெரும் பாராட்டுதலுக்கு உரியது மட்டுமல்ல, மிகவும் வரவேற்று வலுப்படுத்த வேண்டிய விடயமாகும்.

அதிலும் தம் உரிமைகளுக்காக போராடிய மக்கள் கூட்டங்கள், இதில் முதன்மையாக இருப்பது மேலும் பெரு மகிழ்ச்சி தருகிறது. ருவண்டா, எதியோப்பியா, எரித்திரியா என முன்னணியில் உள்ளன. ருவண்டா 30 சதவீத நிலப்பரப்பை காட்டு வனமாக மாற்ற முனைந்து நிற்கிறது. எதியோப்பியா சமீபத்தில் ஒரு நாளில் 35 கோடி மர நடுகையைச் செய்து உலக சாதனை படைத்துள்ளது..

ஒரு தேசத்தின் மண்வளம், நீர்வளம், பயிர்ச்செய்கை வளம், இயற்கை வேளாண்மை எனப் பலவற்றில் அத்தேசத்தின் மரவளம் முதன்மையாகிறது என்பதாலேயே, ஈழ விடுதலை வரலாற்றில் இதுவும் முதன்மையாகக் கொள்ளப்பட்டு மரநடுகை வன்னியெங்கும் முதன்மைப்படுத்தப்பட்டது.

அது மட்டுமன்றி அத்துமீறிய மர வெட்டல், தடுக்கப்பட்டு அதற்கான தண்டனைகளும் கடுமையாக்கப்பட்டதுடன், இதற்கான தனித்துவமான நிர்வாக அலகு உருவாக்கப்பட்டு இவ்விடயத்தில் மிகவும் இறுக்கமான போக்கு கடைப்பிடிக்கப்பட்டது. மிகவும் வறட்சியான பகுதியை இலங்கைத் தீவில் கொண்டுள்ள தமிழர் தாயகப்பகுதிகளில், இது குறித்த பார்வையும் முன்னெடுப்பும் முக்கியமானது.

ஆனால் 2009இற்கு பின்னர், இவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்ட மரங்களே முதலில் வெட்டி ஆக்கிரமிப்பாளர்களால் விற்பனை செய்யப்பட்டன. ஆனால் எம்மிடம் இருந்து எவ்வித எதிர்ப்பும் எழவில்லை. அதேவேளை எமது எதிர்காலத்தின் முக்கிய தேவையான தொடர்ந்த மரவளர்ப்பு விவகாரம், நீர்த்துப்போன விடயமாகியுள்ளது. ஆபிரிக்க உரிமைப் போராட்ட மக்கள் தங்கள் வாழ்வியல் சிறக்க கற்ற பாடங்களை, உணர்வுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கையில் நாம் மாத்திரம் ஏன் எல்லாவற்றிலும் நீர்த்துப் போகிறோம்?



# இலங்கைக்கு ஆறுதல் வெற்றி

## மலிங்கவின் பந்து வீச்சால் திணறல்; நியூஸிலாந்து 37 ஓட்டங்களால் தோல்வி

நியூஸிலாந்துக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி - 20 போட்டியில் இலங்கை அணி 37 ஓட்டங் களால் அபார வெற்றியைப் பெற்றுள்ளது.

இதேவேளை, இப்போட்டியில் அடுத்தடுத்து 4 விக்கெட்டுகளை கைப்பற்றி இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க ரி – 20 வரலாற்றில் புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

லசித் மலிங்க முதல் மூன்று ஓவர்களில் 5 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணிக்கும் மற்றும் இலங்கை அணிக் கும் இடையிலான 3 ஆவது ரி – 20 போட்டி கண்டி பல்லேகல மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இப்போட்டியில் இலங்கை அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்தவகையில் இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தனுஸ்க குணதிலக 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மிற்சல் சான்டனர் மற்றும் ரோட் அஸ்ரில் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி லசித் மலிங்கவின் பந்து வீச்சுக்கு தடுமாறி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது.

முதல் 6 ஓவர்களில் நியூஸிலாந்து 33 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்தது. இதன் போது மூன்றாவது ஓவரில் லசித் மலிங்க கடைசி 4 பந்துகளில் தொடர்ந்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இந்நிலையில் நியூஸிலாந்து அணி 16 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

நியூஸிலாந்து அணி சார்பாக ரிம் சௌதீ 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் அகில தனஞ்சய 2 விக்கெட்டுகளையும், லக்ஷன் சந்தகன் மற்றும் வனிது ஹசரங்க ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

மூன்று போட்டிகளைக் கொண்ட ரி – 20 தொடரை நியூஸிலாந்து அணி கைப்பற்றியுள்ள போதும் இலங்கை அணி இறுதிப் போட்டியை வென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

### கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின்

## ஒப்பந்த விதிமுறையை மீறியுள்ளாரா கார்த்திக்?

ஒப்பந்த விதிமுறையை மீறியுள்ளார் என வந்த புகாரையடுத்து தினேஷ் கார்த்திக்குக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சார்பில் விளக்கம் கேட்டு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் இடம் பிடித்து விளையாடிய தமிழகத்தைச் சேர்ந்த 34 வயதான தினேஷ் கார்த்திக் சர்ச்சையில் சிக்கி இருக்கிறார்.

மேற்கிந்தியத் தீவில் நடந்து வரும் கரிபீயன் பிரிமியர் லீக் (சி.பி.எல்.) கிரிக்கெட் தொடரின் தொடக்க ஆட்டத்தின்போது அவர் டிரின்பகோ நைட் ரைடர்ஸ் அணியுடன் இருந்துள்ளார். இது இந்தி நடிகர் ஷாருக்கானுக்கு சொந்தமான அணியாகும். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியை பெறாமல் அவர் அங்கு சென்றதால் ஒப்பந்த விதிமுறையை மீறினார் என புகார் கிளம்பியுள்ளது.

இதையடுத்து அவருக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சார்பில் விளக்கம் கேட்டு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிர்வாகி ஒருவர் கூறுகையில் –

'இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமை செயல் அதிகாரி ராகுல் ஜோரி அவருக்கு அறிவித்தல் அனுப்பியுள்ளது உண்மை தான். தினேஷ் கார்த்திக் டிரின்பகோ நைட் ரைடர்ஸ் அணி வீரர்களின் ஓய்வறையில் இருக்கும் புகைப்படம் எங்களுக்கு கிடைத்துள்ளது. உங்களது மத்திய ஒப்பந்தத்தை ஏன் ரத்து செய்யக் கூடாது என்று அவரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது' – என்றார்.









# சனிபகவான்

## 12 ராசிகளையும் 2020இல் ஆட்டிப்படைக்க போகின்றார்?

### அதீத ராஜயோகம் பெறும் ராசிக்காரர்கள் நீங்கள் தானா?



எதிர்வரும் தை மாதம் 2020ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி சனி பகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார்.

சனிபகவானின் பார்வை 3,7,10ஆம் இடங்களின் மீது விழுகிறது. தனுசு ராசியில் இருந்து சனி பகவான் மூன்றாம் பார்வையாக மீனம் ராசியையும், ஏழாம் பார்வையாக கடகம் ராசியையும், 10ஆம் பார்வையாக துலாம் ராசியையும் பார்வையிடுகிறார்.

சனி பகவான் ஒருவரின் ராசிக்கு 3,5,6,9,10,11 ஆகிய இடங்களில் சஞ்சரிக் கும் கால கட்டத்தில் சங்கடங்கள் இல்லாத சந்தோஷங் களைத் தருவார்.

ஏழரை சனி காலத்தில் சனிபகவான் விரயசனி, ஜென்ம சனி, பாதசனி என படிப்பினைகள் கொடுப்பார். அர்தாஷ்டம சனி, கண்டச்சனி, அஷ்டம சனி என கஷ்டப்பட்டாலும் கடைசியில் நல்ல விடயங்களை கற்றுக் கொடுப்பார்.

சனிபகவான் நீதிமான் என்பதால் அவர் சோதனைதான் கொடுப்பார். சில சமயம் விபரீத ராஜயோகத்தையும் தருவார்.

சனி பகவான் மந்தன். மெது வாக நகரும் கிரகம் ஒரு ராசியில் இரண்டரை ஆண்டுகாலம் தங்கும் சனிபகவான் 12 ராசிகளையும் சுற்றி வர 30 ஆண்டுகாலம் எடுத்துக்கொள்கிறார்.

நிகழ இருக்கும் சனிப்பெயர்ச்சியால் ஏழரைச்சனி, கண்டச்சனி, அர்த்தாஷ்டம சனி, அஷ்டம சனியால் அவதிப்படபோகும் ராசிகள் யார் யார் என்று பார்க்கலாம்.

அதே நேரத்தில் கோடீஸ்வர யோகம், விபரீத ராஜயோகம் பெறும் ராசிக்காரர்கள் யார் யார் என்றும் பார்க்கலாம்.

**சனியின் சஞ்சாரம் பார்வை**

சனிபகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசியான தனது சொந்த வீட்டிற்குச் செல்கிறார். சனியின் சஞ்சாரம், பார்வையால் இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்கு மேஷம், ரிஷபம், சிம்மம், விருச்சிகம், மீனம் ஆகிய ராசிக்காரர்கள் அதிக பலன்களையும், லாபங்களையும், வளர்ச்சியும் ராஜயோகத்தையும் பெறப்போகின்றனர்.

அதே நேரத்தில் தனுசு, மகரம் கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனியும், துலாம் ராசிக்கு அர்தாஷ்டம சனியும் நடைபெறப் போகிறது.

மிதுனம் ராசிக்கு அஷ்டம சனியும், கடகம் ராசிக்கு கண்டச்சனி காலமும் தொடங்கப் போகிறது. இதனால் என்ன பாதிப்பு வரும் அதற்கான பரிகாரம் என்ன என்ற பார்க்கலாம்.




சனி பகவான் மேஷம் ராசிக்கு பத்தாம் வீடான தொழில் ஸ்தானத்தில் அமரப்போவதால் செய் யும் தொழில் வளர்ச்சி யடையும். சனியால் கொடுக்கும் பதவி, சொத் துக்களை யாராலும் அசைக்க முடியாது. திருமணம் நடக்கும், குழந்தை பாக்கியம் கிடைக்கும். கோடீஸ்வர யோகம் வரப்போகி றது.




அஷ்டம சனி முடிந்து பாக்கிய சனி தொடங்கு கிறது. சனியால் யோகங் கள் அதிகம் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். தொழிலில் லாபம் அதி கரிக்கும். நகை, பொன் பொருள் சேர்க்கை அதிகரிக்கும்.





சனிபகவான் இதுநாள் வரை கண்டச்சனியாக இருந்து கஷ்டங்களைக் கொடுத்தார். இனி எட்டாம் வீட்டில் அஷ்டம சனியாக அமரப்போகிறார். எட்டாம் வீட்டு அதிபதி சனி எட்டில் ஆட்சி பெற்று அமர்வது விபரீத ராஜயோக காலமாகும்.




கடகம்ராசிக்காரர்களே சனிபகவான் உங்கள் ராசிக்கு ஏழாம் வீட்டில் கண்டச்சனியாக அமரப் போகிறார். சனிபகவான் உங்கள் ராசியை பார்ப் பதால் கண்டச்சனியை யும் கஷ்டமில்லாமல் கடந்துவிடுவீர்கள். சனி மிகப்பெரிய யோகம். வேலையில் வியா பாரத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.




உங்கள் ராசி அதிப திக்கு எதிரியாகவே இருந் தாலும் சனி ஆறாம் வீட்டு அதிபதி ஆறில் ஆட்சி பெற்று அமர்ந்து விபரீத ராஜயோகத்தை தரப் போகி றார். சனி பகவான் தனது சொந்த வீட்டுக்கு வருவதால் நோய்கள் தீரும். திடீர் அதிர்ஷ் டங்கள் அமையும். இனி இரண்டரை ஆண்டு காலம் உங்களுக்கு ராஜயோக காலம். சுகங் கள் தேடி வரும். செல்வமும் செல்வாக்கும் கூடும்.




உங்களுக்கு துன்பங் களில் இருந்த விடிவு காலம் பிறக்கப்போகி றது. பூர்வஜென்ம புண் ணியங்களை கொண்டு வந்து அறுவடை செய் வீர்கள்.


நல்லது அதிகம் நடக்கும். சனி உங்கள் ராசிக்கு ஆறுக்கு உடையவர் ஐந்துக்கு உடை யவர் என்பதால் வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும். பணவரவு அதிக மாகவே இருக்கும்.




துலாம் ராசியில் சனி பகவான் உச்சமடைபவர் என்பதால் உங்களுக்கு எந்த கெடுதலும் செய்ய மாட்டார். நான்காம் வீட்டு அதிபதி நான்கில் ஆட்சி பெற்று அமர்வதால் பாதிப் புகள் இருக்காது.பணவரவு அதிகரிக்கும் அதே நேரத்தில் நோய்களும் வெளிப்படும். நோய் களைக் குணப்படுத்துவீர்கள். தனவரவு அதி கரிக்கும். ஆசைகளை குறிக்கோள்களை சனி நிறைவேற்றுவார்.




ஏழரை ஆண்டுகால மாக சனி விருச்சிகத்தை ஆட்டி படைத்தது. இனி நன்மைகள் தேடி வரும் காலம். வராத பணம் தேடி வரும். முன்னேற்றத்திற்கு வழி கிடைக்கும். ஏழரை ஆண்டுகாலமாக துன்பப்பட்டு சாவின் கடைசி நுனிவரை பார்த்து விட்டு வந்திருப்பீர்கள். உங்களின் துன்பங் கள், துயரங்கள் நீங்கும் காலம் வந்து விட்டது. கொடுத்தகடன்கள் வசூலாகும்.




சனிப்பெயர்ச்சியால் அதிகம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தனுசு ராசிக்காரர்கள் கொஞ் சம் பெருமூச்சு விட முடி யும். காரணம் ஜென்ம சனி விலகுது அதே நேரத் தில் ஏழரை சனியின் கடைசி இரண்டரை ஆண்டு காலம் பாத சனியாக தொடர்வதால் கொஞ்சம் கவனம் தேவை. தன வருமானமும் லாபமும் கிடைக்கும்.சனியின் பார்வை ராசிக்கு நான்காம் வீடு, எட்டாம் வீடு,பதினொன்றாம் வீடுகளின் மீது விழுவதால் கஷ்டங்களை எளிதாக கடந்து விடலாம். எவ்வளவோ பார்த் துட்டோம் இதையும் ஒரு கை பார்த்துடுவோமே என்ற தெம்பு வந்து விடும்.




மகர ராசிக்காரர்க ளுக்கு இரண்டரை ஆண்டு காலம் ஜென்ம சனி தொடங்குகிறது. சனி பகவான் தன்னு டைய ராசியில் ஆட்சி பெற்று அமரப்போகி றார். முதல் சுற்றில் உள்ளவர்களுக்கு ஜென்ம சனி மன அழுத்தம், தடுமாற்றங்களைத் தரு வார். வேலை செய்யும் இடத்தில் நிம்மதியைத் தருவார். அனுபவங்களினால் பக்குவப்படுத் துவார்.

இந்த சனிப்பெயர்ச்சியை எளிதாக கடந்து விடுவீர்கள். கடினமாக உழைப்பீர்கள், பொறுப்பு அதிகரிக்கும். உழைப்புக்கு முக்கியத்துவம் தருவீர்கள். 30 வயதிற்கு மேற்பட்ட சிலர் தொழில் தொடங்குவீர்கள். கடல் கடந்து செல் லும் எண்ணம் வரும். தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள்.




சனி பகவான் ஒருவ ரின் ராசிக்கு 12, 1, 2 ஆம் வீடுகளில் இருப்பது ஏழரை சனி காலமாகும். முதல் இரண்டரை ஆண் டுகள் விரய சனி.

2020 ஆம் ஆண்டு முதல் கும்பம் ராசிக்கு விரய சனியாக ஏழரை சனி தொடங்குகிறது. இந்த கால கட்டத்தில் பணத்தை பணமாக வைத்திருக்காமல் சொத் துக்களில் முதலீடு செய்யலாம். விபரீத ராஜ யோகத்தையும் தருகிறார் சனி. காரணம் சனி பகவான் உங்கள் ஆட்சிநாதன். சம்பாதித்த பணத்தை செலவு பண்ணும் காலம்.




மீனம் ராசிக்காரர் களுக்கு லாப சனி கால மாகும். செய்யும் தொழி லில் லாபமும், அபரிமி தமான வருமானமும் கிடைக்கும். சனிபகவான் பார்வை உங்கள் ராசியில் விழுவதும் கூடுதல் பலம். திருமணமான தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் கிடைக் கும். அந்நிய தேசத்து வருமானம் உங்களை கோடீஸ்வரர் ஆக்கும்.





யாழ் நகரில் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற பஸ் நிலையத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பார்வையிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரதமர் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார்.

நேற்று முதலாவது நிகழ்வாக யாழ். மாநகர சபையால் நகர மத்தியில் அமைக் கப்படவுள்ள பஸ் நிலையத்தை அவர் சென்று பார்வையிட்டார்.

இதன் போது நகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர முதல்வர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# சுகாதார பணி உதவியாளர்களுக்கான நேர்முகத்தேர்வு மீண்டும் இடம்பெறும்

## போலியான சான்றிதழ்களுடன் நேர்முகத்தேர்வுக்கு வருபவர்களுக்கு எதிராகக் கடும் சட்டநடவடிக்கை

சுகாதாரப் பணி உதவியாளர்கள் 454 பேரை நியமிப்பதற்காக கடந்த மாதம் இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகள் அதனுடைய பெறுபேறுகள் அனைத்தையும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்துமாறும் , இந்த வெற்றிடத்துக்கு தோற்றிய 1923 பேருக்கும் மீண்டும் நேர்முகத்தேர்வை நடத்துமாறும் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் இதுதொடர்பான அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

சுகாதாரப் பணி உதவியாளர்களின் ஆட்சேர்ப்பின் போது சில தவறுகள் இடம்பெற்றுள்ளமையைக் கண்டறிந்துள்ள ஆளுநர், இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு வடக்கு ஆளுநரின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இதேவேளை நேர்முகத்தேர்வுக்கு வருகை தருபவர்கள் போலியான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் வருகை தந்து அவை பொய்யானவை என்று உறுதி செய்யப்பட்டால் அவர்களுக்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஆளுநர் எச்சரித்துள்ளார்.

ஒரு மாதத்திற்குள் இந்த நேர்முகத்தேர்வை நடத்தி அவர்களை குறித்த வெற்றிடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ள ஆளுநர், இதற்காக 24 குழுக்களை நியமிக்குமாறும் ஒரு குழுவில் 3 அதிகாரிகள் பணியாற்றுகின்றமையுடன் இதற்கு மேலதிகமாக பார்வையாளர்களாக வடமாகாண மக்கள் பிரதிநிதிகளின் பிரதிநிதி ஒருவரும், நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுபவர்களின் பிரதிநிதி ஒருவரும் பங்கு கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார். இதன்மூலம் வெளிப்படைத்தன்மை நேர்முகத் தேர்வின்போது காணப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2020 ஜனவரி முதலாம் திகதி முதல் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்களில் 6 சதவீதம் மாற்றுத்திறனாளிகள் , 5 சதவீதம் பெண் தலைமைத்துவ குடும்பங்களை சார்ந்தவர்கள், 3 சதவீதம் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மற்றும் ஒரு சதவீதம் மாற்றுப் பாலினத்தவருக்காகவும் இடத்தை ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார் எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.09.2019 இல் வெளியிடப்பெற்றது.
















வவுனியாத் தமிழ்ச் சங்கம் நடத்திய சேதன விவசாய சிந்தனை அரங்கம், தமிழருவி சிவகுமாரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது பா.செல்வஉதயம் தம்பதி மங்கள விளக்கேற்றுகின்றமையையும் பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தமிழ்ச் சங்கத்தால் கௌரவிக்கப்படுகின்றமையையும் பா.நேசராஜா, மு.நந்தகுமார்,ஆ.பிரபாகரன், சி.பத்மநாதன் ஆகியோர் உரையாற்றுகின்றமையையும் சபையில் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (இ)

# யாழ். மாநகர சபை கட்டடத்துக்கு அடிக்கல்









யாழ்ப்பாண மாநகர நகர மண்டபத்துக்கான நிரந்தரக் கட்டடத்திற்கான அடிக்கல்லை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சனிக்கிழமை நட்டு வைத்தார்.

235 கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மாநகர மண்டபத்திற்கான அடிக்கல் நடும் இந்த நிகழ்வு மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது.இவ்வாறு அமையவுள்ள மாநகரத்திற்கான மண்டபத்திற்காக 2019ஆம் ஆண்டில் 75 கோடி அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர,கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா,எம்.ஏ.சுமந்திரன்,த.சித்தார்த்தன்,யாழ் மாநகர சபை உறுப்பினர்கள்,யாழ்ப்பாண மாவட்ட் செயலர் நா.வேதநாயகன்,யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், நகர அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (இ)

# இலங்கையின் ஓய்வு பெற்ற மூத்த பிரதம நீதியரசர்களுள் ஒருவர் கோட்டாவுக்காகக் கீழ்நிலை நீதிமன்றத்தில் ஆஜரான அவலம்!

அசோக டி சில்வா கலிபோர்னியா நீதிமன்றத்தில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆஜரானமை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவரால் மீண்டும் சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் ஆஜராக முடியுமா என்பது தொடர்பில் சட்ட நிபுணர்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் ஊடக அறிக்கைகளில் கருத்துக்களைத் தெரிவித்திருந்தமையைக் காணக் கூடியதாக உள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷ தனது தந்தையைக் கொலை செய்வதற்கு சதி செய்தல், ஒத்துழைப்பு வழங்கியமை அல்லது உடந்தையாக இருந்தமை தொடர்பில் குற்றம் சுமத்தி ஊடகவியலாளர் லசந்த விக்ரமசிங்கவின் மகளான அஹிம்சா விக்ரமதுங்க கலிபோர்னியா நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

ஆயினும், தனது சேவை பெறுநர் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலையுடன் எந்த வகையிலும் தொடர்புபட்டிருக்கவில்லை என கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்திருந்தனர்.

கலிபோர்னியா நீதிமன்றம் இந்த வழக்கை விசாரணை செய்யாது தள்ளுபடி செய்ய வேண்டும் என முன்னாள் பிரதம நீதியரசர்களுள் ஒருவரான அசோக த. சில்வா உள்ளிட்ட சட்டத்தரணிகள் பிரதிவாதி கோட்டாவுக்காக மனுத் தாக்கல் செய்து வாதிட்டனர்.

நீதியரசர் ஒருவர், அதுவும் பிரதம நீதியரசர் ஒருவர், ஓய்வு பெற்றதன் பின்னர் சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் ஆஜராக முடியுமா?

இது தொடர்பில், ஜனாதிபதி சட்டத்தரணி பிரசன்ன லால் த அல்விஸிடம் கேட்டபோது, இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் உயர் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களால் நீதிமன்றங்களில் ஆஜராக முடியாது. ஆனால் நீதிமன்றத்தில் அறையில் இருந்து கொண்டு ஆலோசனைகளை வழங்க முடியும். (Chamber Practise). இதுவே சாதாரண சம்பிரதாயம் எனக் கூறியுள்ளார்.

ஆனால் ஜனாதிபதியின் அனுமதியுடன் மாத்திரம் நீதிமன்றத்தில் ஆஜராக முடியும். முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா ஆஜராகியிருப்பது வேறு நாடொன்றின் நீதிமன்றத்தில் என்பதால் தொழில்நுட்ப ரீதியில் பிரச்சினைகள் எழப் போவதில்லை

சட்ட விடயத்தில் நாம் சொற்களுக்கு வரைவிளக்கணம் வழங்குகின்றோம். அவ்வாறு எடுத்துக் கொண்டால் அசோக டி சில்வா தவறு செய்யவில்லை. ஆனால் நாடாளுமன்றம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் நோக்கத்தையும் பார்க்க வேண்டும். உயர் மட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் மீண்டும் சட்டத்துறைக்கு வந்து செயற்படும் போது சுயாதீனத் தன்மை தொடர்பில் பிரச்சினைகள் எழலாம். அதேபோன்று ஏனைய நீதிபதிகளுக்கும் அழுத்தங்கள் ஏற்படக் கூடும். உதாரணமாக, முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் வந்து நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராரகினால் அதன் மூலம் நீதிவானுக்கு அழுத்தங்கள் ஏற்படக் கூடும்

இவ்வாறான காரணங்களால்தான் இவ்வாறான பிரிவுகள் அரசிமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கக் கூடும். ஆனால் வெளிநாட்டு நீதிமன்றத்தில் ஆஜராகியது இதற்குத் தாக்கத்தைச் செலுத்தாது. உண்மையிலேயே இதில் இருப்பது ஒரு தார்மீக விடயமாகும். உலக நாடுகளின் உயர் மட்ட நீதிமன்றங்களின் நீதியரசர்கள் ஓய்வு பெற்றதன் பின்னர் மீண்டும் நீதிமன்றங்களில் ஆஜராகாமலிருப்பது தார்மீகக் காரணங்களினாலாகும். எனினும் அண்மைய காலங்களில் இலங்கையின் பிரதம நீதியரசர்கள் வங்கிப் பணிப்பாளர் பதவிகளையும் கூடப் பொறுப்பேற்றிருக்கின்றார்கள். இதனை இதுவரையில் எவரும் சவாலுக்கு உட்படுத்தவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டார்.

சட்டத்தரணி நுவன் போபகே இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது, முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் இவ்வாறு சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் ஆஜராகியமை ஊடாக சட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் இருக்கும் நம்பிக்கை இல்லாமல் போகும் எனத் தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றம் தீர்ப்புக்கள் வழங்கிய பின்னர் அது நாட்டின் சட்டமாக ஆகிவிடும். அந்தச் சட்டங்களுக்கு இருக்கும் வரவேற்பு, நம்பிக்கைத் தன்மை போன்றவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தொடர்பில் அரசமைப்பில் சட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

உதாரணமாக, பிரதம நீதியரசர் ஒருவர் கோட்டாபய ராஜபக்ஷவின் வழக்கு ஒன்றில் அவருக்குச் சார்பாக தீர்ப்பை வழங்குகின்றார். அந்நேரத்தில் பொது மக்கள் நினைப்பது அது பக்கச்சார்பான தீர்ப்பு என்றேயாகும். அதே போன்று அந்த தீர்ப்பு நாட்டின் சட்டமாகவும் ஆகிவிடும். எனினும் அதற்குப் பின்னர் பிரதம நீதியரசர் ஓய்வுபெற்ற பின்னர் அதே நபருக்காக மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகும் போது அதனால் மக்களிடத்தில் சட்டம் தொடர்பில் சந்தேகம் ஏற்படுத்தப்படுகின்றது. அத்துடன் நீதிமன்ற தீர்ப்புக்களுக்கு இருக்கும் பெறுமதி மற்றும் கனதி இல்லாமல் போகின்றது

இதற்கு முன்னர் ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர்கள் அரசியல் மேடைகளில் ஏறியிருக்கின்றார்கள். தற்போது இந்த முன்னாள் பிரதம நீதியரசரான அசோக டி சில்வா சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கின்றார். இதனடிப்படையில் உயர் நீதிமன்றம் அல்லது நீதிமன்றங்கள் நூற்றுக்கு நூறு வீதம் சுயாதீனமானவையா என்ற கேள்வி எழுகின்றது என்றார்.

## சமூக வலைத்தளத்தில் பதிவான கருத்துக்கள்

இது விதிகள், சம்பிரதாயங்கள் தொடர்பான கதை.... சட்டத்தொழிலில் ஈடுபடுவதற்கு அவருக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. ஜனாதிபதியின் அனுமதி தேவையில்லை... – சிந்தா ஆட்டிகல முகநூலில் தனது கருத்தை இவ்வாறு பதிவிட்டிருந்தார்.

.முன்னாள் பிரதம நீதியரசருக்கு இது தொடர்பில் ஏதேனும் சட்ட ரீதியான பதில் இருந்திருக்கக் கூடும். என்றாலும், இவ்வாறு ஆஜராகியதன் மூலம் இலங்கை நீதிமன்ற சம்பிரதாயங்கள் கடுமையான அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளன. இலங்கையின் ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் ஒருவர் இவ்வாறு வேறு நாடொன்றின் கீழ் நீதிமன்றத்தின் நீதிபதியின் முன்னால் ஆஜராகியதன் மூலம் இலங்கை அரசாங்கமும், அதன் நீதிமன்ற கட்டமைப்பு படிநிலையும் அவமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய முன்னாள் பிரதம நீதியரசர்களும், முன்னாள் உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களும் இவ்வாறு நீதிமன்றங்களில் ஆஜராக ஆரம்பித்தால் நிலைமை எவ்வாறானதாக ஆகும்? – என துலான் தசநாயக்கா முகநூல் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

மலீஷா குமாரகே முகநூலின் ஊடாக தெரிவித்த கருத்தில் தனது நிலையைப் பற்றியும் சிந்திக்காது பணத்திற்காக அலையும் இவ்வாறானவர்கள் நீதியரசர்களாக இருந்த காலத்தில் விசாரணை செய்த வழக்குகளுக்குச் சரியான தீர்ப்புக்களை வழங்கியிருப்பார்களா என்ற சந்தேகம் எழுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## அசோக த சில்வா

இலங்கையின் 42வது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட அசோக த சில்வா கண்டி சென் அந்தோனி வித்தியாலயத்தில் கல்வி கற்று 1967 ஆம் ஆண்டில் கொழும்பு பீடத்தில் அனுமதி பெற்றுள்ளார். அதன் பின்னர் சட்டக்கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்ததன் பின்னர் 1972 ஆம் ஆண்டு சட்டத்தரணியாகத் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

1981ஆம் ஆண்டு அரச சட்டத்தரணியாகச் செயற்பட்ட அவர் 1987ஆம்ஆண்டில் பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகச் செயற்பட்டார்.

1995 ஆம் ஆண்டில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இணைந்து கொண்டதோடு 2001 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார். 2004 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு வருடங்கள் அவர் ஐக்கிய நாடுகளின் இராணுவ நீதிமன்றத்தில் நீதியரசர் பதவியையும் வகித்துள்ளார்.

2009ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டு வரையில் அவர் இலங்கையின் பிரதம நீதியரசராகவும் செயற்பட்டுள்ளார். *



கோட்டா, பஸிலுடன் நீதியரசர் அசோக டிசில்வா.



கோட்டா ஒருபுறம்; தந்தை லஸந்தவின் பூதவுடலுக்குப் பக்கத்தில் மகள் அஹிம்சா மறுபுறம்.

**இலங்கையின் 42வது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட அசோக த சில்வா கண்டி சென் அந்தோனி வித்தியாலயத்தில் கல்வி கற்று 1967 ஆம் ஆண்டில் கொழும்பு பீடத்தில் அனுமதிபெற்றுள்ளார். அதன் பின்னர் சட்டக்கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்ததன் பின்னர் 1972 ஆம் ஆண்டு சட்டத்தரணியாகத் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார். 1981ஆம் ஆண்டு அரச சட்டத்தரணியாகச் செயற்பட்ட அவர் 1987ஆம்ஆண்டில் பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகச் செயற்பட்டார்.**